www.padippakam.com

# வெந்தவனம்



வேலணையூர்
பொன்னண்ணா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வேலணையூர்
# பொன்னண்ணாவின்

# "வெந்தவனம்"

(கவிதைத்தொகுதி)

படிப்பகம்

www.padippakam.com



"VENTHAVANAM"
by Velanaiyoor Ponnnanna

First Edition: may 1997

Publisher: Mrs. T. Thavamanidevi
Møllevej 7 J
7190 Billund
Denmark
Tl.P 75 33 87 92

Copyright : Author

Front cover & Lay out: Mullaiyooran

படிப்பகம்

www.padippakam.com



தாயகத்தில் சொந்த அம்மாவின் பாலுக்கும் உறவிற்கும் ஏங்கி நிற்கும் எம் எதிர்கால சந்ததியின் பாதம் தொட்டு இதனை அவர்க்கே சமர்ப்பணம் செய்கின்றேன்.

படிப்பகம்

www.padippakam.com



## ஒரு முன்னுரை

நாடறிந்த பொன்னண்ணாவின் இரண்டாவது வெளியீடான " வெந்தவன"த்திற்கு நான் முன்னுரை எழுத முற்பட்டுள் ளேன்.இதை ஒரு அன்பு அழைப்பாகவும் ஏற்கலாம். அல்லது ஒரு நிர்ப்பந்தமாகவும் ஏற்கலாம்.
அன்புபற்றி ......நான் ஒன்றும் பெரிதாக கதைக்க முற்படவில்லை. ஏனெனில் அன்பு பற்றிப் பலரும் கதைக்கிறார்கள். ஆனால் நிர்ப்பந்தம் பற்றி யாரும் பேசுவதாகத் தெரியவில்லை. சில நிர்ப்பந்தங்கள் புலம்பெயர் இலக்கிய கர்த்தாக்களென தம்மை வெளிக்காட்டும் மனிதர்கட்கு நெருக்குதல்களை ஏற்படுத்தக்கூடும். என்னைப் பொறுத்தவரையில் – நான் இலக்கியகர்த்தாவா அல்லது புலம்பெயர் மானிடனா எனத் தெரியவில்லை. எனினும் எனக்கென ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. "எழுது ஆதவா! ஒருமுன்னுரை. நிலமாகி உன்னுள்ளே வெந்தமனமானதை எழுது" எனும் நிர்ப்பந்தம்.
வாழ்வு மாறக்கூடியது.நானும் நீங்களும் இப்பொழுது இருப்பதைவிட மாறிவிடுவோம்.சீட்டும் வட்டியும் புட்டும் இடியப்பமும்கூட மாறிவிடும்.எப்பொழுதும் நிலையாய் இருப்பது பொன்னண்ணா வணங்கும் சித்திவினாயகர்தான். சித்திவினாயகரின் துதிபாடித்தான் அவர்; தன் நெஞ்சைத் திறக்கிறார்.

பொன்னண்ணாவின் கவிதைநெஞ்சம் பற்றி யாரும் சந்தேகப்படக்கூடாது. அவரிடமிருந்து சில நல்லவரிகள்

படிப்பகம்

www.padippakam.com



உருவாகின்றன. "நீங்கா நினைவுகள்" என்ற அவரது கவிதையினூடாகத் தன்னை தன் பசுமையை நினைவுகூருகிறார். அதன்பின்னர் அவர் எப்படியோ ஒரு தனிவழியில் போகிறார்.

அவரது வரிகளை நான் இங்கே ஒரு முழுக் கவிதையாக்குகிறேன். எல்லாமே அவரது வரிகள். வெந்தமனதில் உருவாகின்றன. நான் ஒன்றும் புதிதாய் சேர்க்கவில்லை. இந்தத்தொகுதியில் நான் கண்ட முத்துக்களாய் ....தேடிக்கண்ட மணிகளாய் இந்தவரிகளை காண்கிறேன்.

ஒருநாள்
சீனிக்குத் தந்த பேப்பரை படிக்கையில்
அப்பாவால் கன்னத்தில் அறைவாங்கி...
          கையிற் கிடந்ததை
          காடையர் கத்திமுனையிலே
          கழற்றி எடுத்ததுவும்
குண்டு மழையின் கீழே
குந்தியிருந்து கணமும் கண்ணுறங்க....
          களத்தினில் நிற்போரல்ல— தாயின்
          கருவினில் இருப்போர்.
சடப்பொருள்தான் பூவரசு—அதன்
சாதனையோ மிகப்பெரிது.
          அகதிவாழ்வு ஆயிரம் தந்தது—ஆனாலும்
          அந்தப் பாய்தந்த சுகமதை...!

www.padippakam.com



சத்தியத்தை மறைத்துவிட்ட
புத்தரின் புத்திரர்கள்....
        நல்லூரான் கோபுரமும்
        நாலிரண்டாய் உடைந்து வீழ
பூப்போட்ட பூசகரும் பயத்தால்
புலம்பெயர்ந்து தான்போக.....
        நீதியில்லா உலகுக்குக்
கிழக்கேன் விடிகிறது?
        நந்தவனம் பூப்பூக்கும்– என்
        வெந்தவனம் ஏது பூக்கும்?

இந்தவரிகளுக்காக பொன்னண்ணாவிற்கு தமிழ்கவிதை உலகம் கடன்பட்டிருக்கிறது.

ஆனால்,ஆனால்,ஆனால் பொன்னண்ணாவின் கவிதைகள் மரபுக் கவிதைகளல்ல.புதுக்கவிதையுமல்ல.

அகவல், வெண்பா, தெம்மாங்கு,சிந்து என எந்த யாப்பிலக்கண முறைப்படியும்இவை செய்யப்படவில்லை. யாப்பிலக்கணப்படி செய்யப்பட்டதை "செய்யுள்" என்பார் சான்றோர். அதேபோல இதயத்தின் உள்ளிருந்து ஆழ்மனத்தின் படிமங்களாய் கவிதைகள் தாமே உருவாகின்றன என்பர் புதுக்கவிதையாளர்.

இவை இரண்டும் இல்லாமல் இவரால் படைக்கமுடிகிறது.

இந்தப் படைப்பினூடாக ..இந்தவடிவத்தினூடாக.....தாய்நிலத்துக்கு ஏதும் பயன் விளையுமாயின்,பயனுக்கான உரமாகப் பொன்னண்ணாவின் வரிகளும் வரலாற்றில் இடம்பெறும்.

படிப்பகம்

www.padippakam.com



மாவீரர் பற்றியும்,தற்கொடைபற்றியும் இன்னும் இன்னும் ஆழமான அகன்ற பார்வைகள் இவரது நெஞ்சிலிருந்து வரவேண்டும்.ஏனெனில் நூற்றுக்கணக்கான கவிதைகள் அழகாக.......அந்தந்தத் தளத்திலேயே அற்புதமாக.....களத் திலிருந்தே படைக்கப்படுகின்றன.

புலம்பெயர் கவிதைவடிவம்....
களத்துக் கவிதைவடிவம் என கவிதைவடிவங்கள் மாறுபட்டிருக்கின்றனபோல் தெரிகின்றது.
இதுபற்றிய ஒரு ஆழமான ஆய்வு வேண்டும்.
இந்த ஆய்வுக்கு, மேற்சொன்ன பொன்னண்ணாவின் வரிகள் வருங்காலத்தில் சான்றுகளாக வாய்ப்புண்டு.
வாழ்த்துக்கள்!
யார்சொல்லியும் எழுதுவதை நிறுத்தாதீர்கள்!
எழுத்தின்மூலம் இறத்தல் என்பது சித்திவினாயகரின் பதமடைதல் எனக் கொள்ளுங்களேன்.

அன்புடன்
திரு. க.ஆதவன்
(யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர்)

படிப்பகம்

www.padippakam.com



## கனிவுரை

சரித்திரத்திற்கு வண்ணம் பூசுவோம்

ஒருமனிதனின் பரிணாம வளர்ச்சி என்ன தெரியுமா? தான் கற்ற,கண்ட,உணர்ந்த, நல்ல செய்திகளை பிறருக்கு சொல்லி நல்வழிப்படுத்துவதே.

இங்கே ஒரு தமிழன் தன் அனுபவப்பந்தலுக்கு தோரணம் கட்டியுள்ளான்.தான் சிந்திய குருதியின் நிறம் சிவப்பென்று கூறவந்துள்ளான்.

தன் அனுபவங்கள் யாவும் உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழனின் "விடுதலைத்தேடல்" என்று பறைசாற்றுகின்றான்.

ஓர் அன்புத்தழுவலால் இந்தத் தமிழனின் முயற்சியை வரவேற்போம்.

லரும்பூவை தடுத்துவிடமுடியாது.

டிக்கும் காற்றுக்கும் அணை உண்டா.

சிந்தனைகளை சிறைப்படுத்தவேண்டியதில்லை.

ஒரு மீள்பார்வைப் புறப்பாட்டில் இந்தத் தமிழனை வாரி அணைப்போம்.சரித்திரத்தை யாராவது சிறைப்பிடித்தாக வேண்டும்.இல்லையேல் நம்மினத்தின் அடையாளங்கள் அழிக்கப்படும்.புத்துணர்ச்சியால் ஒரு குளியல் போடுவோம். நம்மை நாமே சுத்தப்படுத்திக்கொள்ள அணியமாவோம். உலகவிளிம்பில் ஒரு தமிழன் தன் இனத்தைப்பற்றி சிந்தித்துள்ளான்.அவனது சரித்திரத்திற்கு வண்ணம் பூசியுள்ளான் என்று மகிழ்ச்சியடைவோம்.ஒரு தென்றல் உரிமையில் இந்தத் தமிழனின் கையில் என் அன்பே முத்தமாகட்டும்.

அன்புடன்.....திரு. சி.அருணாசலம்.("அருவி" ஆசிரியர் மலேசியா)

www.padippakam.com



## எனதுரை

என் இனிய வாசகர்களே!

புலம்பெயர் இலக்கிய உலகிற்குள் "நிலமாகி" எனும் எனது முதலாவது கவிதைத் தொகுதிமூலம் என்னை உள்வாங்கி,அன்புக்கரம் நீட்டி வரவேற்று,ஆதரவுதந்து மேற்படி உலகிற்குள் நிமிர்ந்து நடைபயில உறுதுணை யாகவிருந்துவரும் எனது அன்புக்குரியவர்களே!

மீண்டும் உங்கள்முன் எனது இரண்டாவது படைப்பான "வெந்தவனம்" என்னும் கவிதைத்தொகுதியுடன் தளராத நம்பிக்கையுடன் உங்கள் முன் வருகின்றேன்.

இந்த வாழ்க்கையில் துன்பமும்,துயரமும்,இருட்டும்,வெளிச்சமும்,களைப்பும், கவலையும் என்றும் நிலைத்து நிற்பவையல்ல. அவை அடிக்கடி மாறலாம். ஆனால் இன்றோ...எம்மினத்தின் வாழ்க்கை கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்பட்ட ஒரு பெரும் கொடியகரும்புள்ளியில் எமதுவாழ்க்கைப்படகு துன்பமும்,துயரமும்,ஏக்கமும்,துயரவாழ்க்கையும்,மரண ஒலியும்,மரணபயமும் நிரந்தரமாகி சொந்தமண்ணிலேயே அகதியாகும் நிலைக்கு தள்ளிவிட்டிருக்கிறது காலம்.

இச்சூழலில் அதிவேகமாக ஓடி வெளியேறிவந்து இன்னொருவன் மண்ணில் அகதியானோம்.

எனினும் நாம் தினம்தினம் தாய்மண்ணை நமது நெஞ்சுக்குள் தேடியவாறு உறவுகள்,உற்றார் ஊரவர் என்று அவர்தம் காட்சிக்காக கடிதக்காரன் வரவுகாத்துநின்று

www.padippakam.com



கடிதங்கள்சுமந்துவரும் சோகச் செய்திகளையும்,குருதி கொட்டும் மரணச்செய்திகளையும்,உறவின்பிரிவுகளையும் நெஞ்சம்குமுறி வெடித்தவண்ணம் மார்கழிமாதக் குளிரை எதிர்க்கும் வெப்பமான உள்ளத்துடன் உயிர்வாழும் காலச்சூழலில் ......

எனது நெஞ்சில் அடிக்கடி உதித்த உணர்ச்சி வடிவங்களே எனது வெந்தமனம் கொடுத்த இந்த வெந்தவனம் தாங்கிவரும் இக்கவிதைகளாகும். இவற்றை; என்னைப்போல உங்களது மனம்வெந்த இச்சூழ்நிலைக்கு இவை உங்களுக்கும் ஏற்றவையாக இருக்கும் என்ற உணர்வோடும்,உணராத உள்ளங்களில் இவற்றால் உணர்வூட்டமுடியாதா? எனும் நல்நோக்கோடும் இக்கவிதைகளை உங்களிடம் தருகின்றேன்.

இக்கவிதைகளுக்குள் கற்றறிய மூழ்குவீர்களேயானால் உங்கள் அன்னை மண்ணின் அவலத்துள் குருதி உறவுகளின் குற்றுயிர் வாழ்க்கைக்குள் நீங்கள் வலம்வருவீர்கள் என்பது எனது தாழ்மையான கருத்தாகும். இக்கவிதைகள் சிலவற்றுள் ஒரே உள்ளடக்கமும் உணர்வுகளும், அதேவேளை பாவனைக்குட்படும் சொற்பதங்களும் ஒத்தனவாக இருப்பது என்பது; காலவோட்டத்தில் தாயகநிலைகள் மனதை வாட்டும்போது எழுந்த ஒரேவடிவங்களின் தன்மைகள் என்பதே அதற்கான காரண காரியமாகும்.

ஓடும் நதியை,பறக்கும் பறவையை பயிர்நுனிப் பனித்துளியை கண்டு கற்பனையில் பறக்கும் கவிஞனல்ல நான். நான் மாறுபட்டவன்.

www.padippakam.com



எனது கற்பனைகளும், சுவைகளும் மாறுபட்டவை. என் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளுக்கு உணர்வுருவாக்கங் கொடுக்கப்பட்டவைகளே இக்கவிதைகள்.இதனால் "காலநீரோட்டத்தின் தேவையின் அவசியமுணர்ந்து மக்களைக் கண்விழிக்கச் செய்யவேண்டும் கவிதைகள்" என்ற கருத்துநிர்ப்பந்தம் எமக்கு உண்டு என்பது எனது வேண்டுகோளாகும்.

அத்துடன் எனது கவிதை உலகப்பயணத்திற்கு கைகொடுத்து உதவிவரும் வாசகப்பெருமக்களுக்கும் அவற்றை பிரசுரித்து ஊக்கமளிக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்திற்கும்; எனது முதல்வெளியீடான "நிலமாகி" நூலை வாசித்து பாராட்டியும்,வாழ்த்தியும், கருத்துகள்கூறி ஆக்கமும் ஊக்கமும் தந்த எழுத்துலக நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

இவையோடு எனது இக்கவிதை முயற்சிகளுக்கு எப்போதும்ஊக்கம்தரும்அன்புத்தம்பி முல்லையூரானுக்கும், இந்நூலு க்கான முன்னுரை வழங்கி இத்தொகுதிக்கு பெருமைசேர்க்கும் மதிப்பிற்குரிய முன்னாள் விரிவுரையாளர் திரு.க.ஆதவன் அவர்கட்கும், இந்நூலுக்கானபின்னுரை வழங்கி மதிப்பளிக்கும் நாவலாசிரியர்திரு.கே.எஸ்.துரை அவர்கட்கும்,கனிவுரை வழங்கிய திரு.சி.அருணாசலம் அவர்கட்கும்,

என்நிழலில் உள்ளிருந்து எனக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்து எனது வளர்ச்சியில் பெரும்பங்கேற்று எனது வெளியீடுகளுக்கு பொறுப்பாக இருக்கும் என் அன்பு மனைவி பொன்மணிக்கும்,எழுத்துப்பிழை திருத்தி உதவிய திருமதி முல்லையூரானுக்கும்இந்தநேரத்தில் நன்றிகூறிகடன்முடிக்காமல் என் இதயச் சுவரில் பதியவைத்து காத்திருக்கின்றேன்.

அன்புடனஎன்றும் உங்கள் வேலணையூர் பொன்னண்ணா
Møllevej 7J: 7190 Billund: Denmark.Tlf:75 33 87 92

www.padippakam.com



மனமுள்

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வெந்தவனத்தின் சொந்தக்காரனும் நானும் டென்மார்க்கின் தலைநகரான ஹொப்பனேகன் புகையிரதநிலையத்தில் இருந்தபடி ஊர், கவிதை என்று கதைத்துக்கொண்டிருந்தோம். காலடியில் புறாக்கள் கவிதைபோல நடந்துகொண்டிருந்தன." ஆகா! இதுவே கவிதை என்றும் இந்தநாட்கள்போல் ஒரு உயிர் இன்னொரு உயிருக்கு அஞ்சாத அந்த நாட்கள் வரவேண்டும்" என்று கூறிய என்னைப் பார்த்து பொன்னண்ணா சிரித்தபடியே "அது இருக்கட்டும் ...... வேலணை ஊரின் வடிவழகையே பேசிக்கொண்டிருந்தார் பொன்னண்ணா.எத்தகையதோர் இன்பநுகர்விலும் மனம்செல்லாதபடி இந்தக் கவிஞனுள் விறைத்துக்கிடக்கும் அந்தஏக்கத்தை கண்டு நான் அஞ்சினேன் அன்று.சொர்க்கத் துக்கு சென்றுகொண்டிருந்த புஸ்ப்பகவிமானம் திடீரென இமயத்தின் உச்சியில் இறங்கிவிட்டநிலையாக புலம்பெயர் வாழ்வுள் கசங்கிக்கிடக்கும் இந்த ஏக்கத்தை ஆய்வுக்குட்படுத்த முடியாது. இதற்கு பொன்னண்ணா நல்லதோர் உதாரணர்.தமிழ்கவிதைஉலகம் புதுப்பிக்கப்பட்டகாலத்தி லிருந்தே கவிதைகளுக்கு கோபசக்தியும் எதிர்ப்புணர்வும் அவசியமானவை என்ற கோட்பாடு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த உணர்வுகள் காலத்தாலும் தூரத்தாலும் விலகிநிற்கும் போது இன்னொரு புதிய புலத்துள் அவை பேசப்படும்போது அந்த உணர்வுகள் பெறுமதி குறைந்து விடுகின்றன.ஆனாலும் அந்த உணர்வுகளின் உண்மைத்தன்மைகள் பொய்த்துவிடு வதில்லை. மொழி மனதோடு விளையாடிக்கொண்டிருந்தால் அது கவிதை.மொழி மனதோடு கதைத்துக்கொண்டிருந்தால் அது கதை.ஆனால் பொன்னண்ணாவின் இந்த வெந்தவனத்துள் மொழி மனதோடு கதைத்தபடியே விளையாடிக்கொண்டிரு க்கின்றது.என்பது எனது அபிப்பிராயம்.

இக்கவிஞனின் உள்மன விவகாரங்களை நான் மதிக்கிறேன். அவர் இன்னும் எழுதவேண்டும்.

முல்லையூரான்.....................டென்மார்க்.......................பங்குனி 1997

www.padippakam.com



ஒரு ரசிகையிடமிருந்து.........

எனக்கு காகம் சஞ்சிகை மூலம் அறிமுகமானதே பொன்னண்ணாவின் கவிதைகள். நான் தமிழில் எல்லாவகை எழுத்துக்களையும் ஆர்வத்துடன் வாசிப்பவள். ஆனால் கவிதை என்று வரும்போது கடந்தகால பள்ளிவாழ்க்கை என்னை பயமுறுத்தும். ஏனெனில் கவிதையில்தான் நான் மட்டமான மார்க்குகள் வாங்குவேன். ஏனெனில் கருத்துப் புரியாமையேயாகும். ஆனால் காகத்தில் வெளிவந்த பொன்னண்ணாவின் கவிதைகளை படிக்க படிக்க ஆர்வம் பன்மடங்காகியது. அவரது கவிதைகள் என்னைக்கவர்ந்ததற்கு பல காரணங்கள் உண்டு. குறிப்பாக அவரது கவிதைகளில் தமிழரின் வாழ்வில் மண்டிக்கிடக்கும் களைகளை களைந்தெறியும் ஒரு உன்னதமிருக்கும்.அத்துடன் நான் வெளியிடத்தயங்கும் சில புரட்சிகரமான ஆவேச அலைகளை எப்படி வெளிக்கொணர்வது என்று புலம்பும்போது காகத்தின் அடுத்த இதழில் எனது எண்ணங்கள் பொன்னண்ணா என்ற சிற்பியின்மூலம் வெளிவரும். அப்படியானவற்றிற்கு உதாரணமாக "என்னகடன்" என்றகவிதையை குறிப்பிடலாம்.

"நல்லவன்போல் நடித்து நாள்முழுதும் கூடித்திரிந்து,கூடிஇருந்து உண்டு குலவிநடந்துவிட்டு..." என்னும் வரிகள் என்மனதைவிட்டு அகலாத வரிகள். புலம்பெயர் வாழ்க்கையின் நிசத்தை எவ்வளவு அழகாக கவிதைமூலம் சித்தரித்துள்ளார். இவரது கவிதையினை

www.padippakam.com



படிக்கும்போது பொருளை இலகுவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.அதிலும் கவிதைகளில் இருக்கும் நிசத்தை நிலைநிறுத்தும் கருத்துக்கள் மிகமிக அழகானவை. கவிதையை யார் எழுதுகின்றார் என்பது கவனத்துக்குரியதல்ல. கவிதையின்மூலம் என்ன கூறப்படுகின்றது என்பதே முக்கியமானதாகும்.வாழ்க்கையின் ஒவ்வொரு படிமத்தையும் சித்தரித்தலே கவிதை. இவை கவிஞர் பொன்னண்ணாவின் கவிதைகளில் உண்டு. உதாரணத்திற்காக எனது மனதில்நிற்கும் கவிதைகளாக "பொறாமை" "மேடைப்போலிகள்" என்பனவற்றை குறிப்பிடலாம். பொன்னண்ணா; புலம்பெயர்ந்திருக்கும் எமது இனத்திடம் மொழியையும், கலாச்சாரத்தையும் காப்பாற்ற துணிந்து ஆயுதமாக தனது கவிதைகளை பிரயோகிப்பது எனது மனதை சிலிர்க்கவைப்பதுண்டு. இவரது ஒவ்வொரு எழுத்துக்களிலும் எழுச்சிப் பிரவாகம் பொங்கி எழுவதை பார்க்கையில் இந்தப் புரட்சி கவிஞனுக்கு என்ன பரிசு கொடுப்பதென்று தெரியவில்லை. எனினும் மனம்திறந்து வாழ்த்துக்கூறுகின்றேன்.

எமது இனிய புரட்சிக்கவிஞனே வாழ்க உமது கவிதைக் காட்டாறு! வளர்க தமிழ்!

பிரியமுடன் உமது ரசிகை
திருமதி. வ. விக்டர்.
டென்மார்க்.
15.02.1994

www.padippakam.com



**சரணம்**

சித்திவிநாயகனே! சரணம் – என்
சிந்தைநிறைந்தவனே சரணம்.
சக்தியின் பாலகனே சரணம்! – என்
புத்தியில் மூத்தவனே சரணம். (சித்தி)
பாரதக் கதைமுடிக்க
பாதிக்கொம்பினைத் தானுடைத்து
காரியம் முடித்து வைத்த – எந்தன்
கரிமுக நாயகனே! சரணம். (சித்தி)
மாயவனார் வெற்றிகொள்ள
வாழ்த்துரைத்த நாயகனே – அரும் கணேஸ
கீதையை எமக்கருளி – பெரும்
கீர்த்தி கொண்ட நாயகனே! சரணம். (சித்தி)
தந்தைதாய் தெய்வமென்று
தரணிக்குச் சொன்னவனே
தம்பி மணம்முடிக்க – பெரும்
தும்பிக் கரியாக வந்தவனே! சரணம். (சித்தி)
காகமாய் உருவம்மாறி –நீர்(க்)
கலசத்தை தட்டிவிட்டு – பெரும்
காவேரி ஓடவிட்ட – எந்தன்
கஜமுக நாயகனே! சரணம். (சித்தி)
நெஞ்சில் சுமைகள் கொண்டேன் – நான்
நிம்மதிதான் இழந்தேன் –இன்று
தஞ்சமென்றே உன்பாதம் கெஞ்சுகின்றேன் ஐயா! – என்
நெஞ்சச்சுமை போக்கி – என்றும்
தஞ்சம் எனக்கருள்வாய். (சித்தி)

www.padippakam.com



## என்னுள் இரு....

சிந்துநதி பிறந்த
சிங்கார(த்)தமிழே!
மன்னவர்கள் வளர்(த்) தெடுத்த
வான்புகழ் தமிழே!
வான்புகழும் வள்ளுவர்க்கு—இரு
வரிகொடுத்த செந்தமிழே!
கவிப்புலவன் கம்பனுக்கும் கண்ணதாசனுக்கும்
கரம்கொடுத்த அரும் தமிழே!
உணர்வு(க்) கவிபாட பாரதிக்கும், பாரதிதாசனுக்கும்
உணர்விட்ட என்தமிழே!
பெருங்கிழத்தி ஔவைக்கு பெருமைதரும்
"வாக்குண்டாம்" பாட வழிசெய்த பெரும் தமிழே!
உன்னை வணங்குகின்றேன் உன்புகழைப் பாடிடவே;
என்றும் என்னுள் இரு! என்றும் என்னுள் இரு!
❖❖❖

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ்

தமிழே! தமிழே!!
என்னுயிர்த் தமிழே!
அன்னையின் மேலாய்
அணைத்திடும் தமிழே!—நான்
உண்டதும் உன்னை,
உடலது மறைக்க
உடுத்ததும் உன்னை,
தாகம் தணித்திட
குடித்ததும் உன்னை.
அன்னியர்நாட்டிலும்
உன்புகழ்தனைப் பாடும்
அன்பனை இப்பாலனை
அணைத்திடு தாயே!
அணைத்திடு தாயே!!

படிப்பகம்

www.padippakam.com



## பிள்ளைகள்

எரியுது...எரியுது... எம்தேசம் – கொடிய
எதிரிகள் போடும் குண்டாலே......
கொதிக்குது....கொதிக்குது...என்நெஞ்சம் – அடுப்பில்
கொதித்திடும் சோற்று உலைபோலே.
சிரிக்குது....சிரிக்குது....தமிழகமும் – எம்மவன்
அவலத்தில் எழுந்த மகிழ்வாலே.
துடிக்கிறாள் துடிக்கிறாள் தமிழன்னை – தன்
பிடிக்குள்ளிருக்கும் பிள்ளைகள் தனைக்காக்க.

கேட்கிறாள் கேட்கிறாள் பிச்சை – தன்
கரத்தினால் தட்டினை நீட்டி
தன்னுதிர உறவென்று தானெண்ணி
தாய்மண்ணைவிட்டு தப்பிய தமிழரிடம்.
தப்பியதமிழரோ! தம்கண்ணை மூடுதல் போதாது
தம்சந்ததி கண்ணையும் மறுகையால் மூடுகின்றார்.
இவர்களும் தமிழர்!........தமிழன்னையின் பிள்ளைகளா?

## நீங்கா நினைவுகள்

கல்லூரி காலத்தில் கண்ணில் நோவந்ததும்,
பரீட்சைக்குத்தானது பங்கம்தான் தந்ததும்,
சட்டத்தைப்பிரம்பாக கையிற்தானெடுத்திட்ட
வாத்திகளிருவரின் வாதாட்டநிலைகளும்....என்றுமே
என் நெஞ்சத்தில் நீங்காநினைவுகள்!நீங்காநினைவுகள்.

காத்தியர் தோட்டத்தில் ஒரு கட்டைத்தென்னையில்
ஒரு நண்பரின் சொல்நம்பி களவாகத்தானேறி
இளநீர் பறித்ததும்,
தடியாலே குற்றி இளநீர் குடித்ததும்,
கல்லாலே குற்றி முட்டுக்காய் தின்றதும்,
அடுத்தநாள் அதற்காக அப்பாவிடம் நல்ல
அடிவாங்கி நின்றதும்...என்றுமே
என்நெஞ்சில் நீங்கா நினைவுகள்!

ஒற்றைப்பனையடி ஒருசெக்கற்பொழுது
செக்கல்வீச்சுக்காரர் சின்னத்தம்பியிடம்
துடிக்கத்துடிக்க கயல்மீன் வாங்கிவந்து
புளிச்சொதி தான்வைத்து அம்மா அவிச்ச முதல்நாள்
ஒடியல் புட்டோடு சுவைத்தது
என்நெஞ்சில் நீங்காநினைவுகள்! நீங்கா நினைவுகள்!

ஒருநாள் சீனிக்குத்தந்த பேப்பரைப்படிக்கையில்
அப்பாவால் கன்னத்தில் அறைவாங்கி

www.padippakam.com



கலங்கிநான் நின்றதும் – பின்
"கண்டதைப் படித்தவன் பண்டிதனாவானென்ற"
பழமொழி தனைச்சொல்லி அப்பாவின்
பாராட்டு முத்தங்கள் பெற்றதும்,
என்றும் என்நெஞ்சில் நீங்கா நினைவுகள்!
நீங்கா நினைவுகள்!

ஐம்பத்தியெட்டிலே எம்மினம் கொழும்பில்
அடிபட்டு நின்றதும்,
கப்பலில்ஏறி அகதியாய் பருத்தித்துறை
கடற்துறை வந்ததும்,
கையிற்கிடந்ததை காடையர் கத்திமுனையிலே
கழற்றியெடுத்ததும்,
என்நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுகள்!

கொடியவன் செயலாலே கொஞ்சும்
அருந்தமிழ் பொக்கிசம் என்தமிழ் மண்ணிலே
என்கண்முன்னே எரிந்ததும்,
செந்தமிழ் விழாவிலே தீயவன் செயலாலே
எம்மவர்சிலர் எரிந்து மடிந்ததை
என்கண்ணால் கண்டதும்,
என்றுமென் நெஞ்சினில் நீங்கா நினைவுகள்!
அவை நீங்கா நினைவுகள்!

www.padippakam.com



## கிளியே சொல்லு

பறந்துவந்த பச்சைக்கிளியே சொல்லு!
பற்றிஎரியும் என் தாய்மண் பற்றி..செய்தி சொல்லு!
ஆற்றங்கரை ஆலமரமாய்–அன்று
வாழ்ந்த எம்மக்கள் –இன்று
அடிக்கும் புயற் காற்றினிலே....அலையும்
சருகானகதைசொல்லு!



உயிரைவிட தாய்மண்
உயர்ந்ததென்று எண்ணி
உயிரைக் குண்டாய் மாற்றி
எதிரிபடை கப்பலெரிக்கும்
எம்மறவர்படைபெருமை
சொல்லு! எமக்கறிய நீயும் சொல்லு!

குண்டுமழையின் கீழே
குந்தியிருந்து கணமும் கண்ணுறங்கா...
தாய்மண் காக்கும்
மறவர் செய்தி சொல்லு!–சொந்த
மண்ணுக்காக உயிர்கொடுத்த
மாவீரர் கதைசொல்லு–இந்த
உலகறியச் சொல்லு!–நீயும்
உயரப்பறந்து சொல்லு!

www.padippakam.com



பள்ளிக்கூடம் கோவில்மீது
பறந்துவந்து குண்டுபோட்டு
சின்னஞ்சிறு பாலகரை
சிதறடித்துக் கொன்றுகுவிக்கும்
சித்தார்த்தர் கொடுஞ்செயலை
சிந்தையுள்ளோர் புரிந்திடவே
பாரெல்லாம் சிறகடித்து
பறந்து பறந்து நீயும்சொல்லு.

பட்டமரப்பொந்தொன்றில்
பதுங்கிநீயும் இருந்தபோது – உனை
பற்றிவந்த என் பாட்டனிப்போ
படுக்கையிலே கிடக்கும் நாளில்
தமிழர் படையில் சேர்ந்த கதையைச்சொல்லு! – இந்த
பாரறியப் பறந்து சொல்லு!
பயம் மறந்து நீயும் சொல்லு!

கூட்டிலுனைப் பூட்டிவைத்து
கொஞ்சிக்குலவி தான்மகிழ்ந்து
பாலும்பழமும் உனக்குத்தந்த – என்
பாட்டிகதையை நீயும் சொல்லு! – அந்த
பாழ்படுவான் போட்டகுண்டால்
பாட்டியோடு கறுத்தப் பசுவும் நாயும் வீடும்
மாண்டழிந்துபோன செய்தி சொல்லு!
பாரறிய நீயும் பறந்து பறந்து சொல்லு!!

படிப்பகம்

www.padippakam.com



## மணிமகுடம்

பெண்ணுக்காய் பொன்னுக்காய்
பேதலிக்கும் இளவயதில்
மண்ணுக்காய் உயிர்கொடுத்து
மாவீரர் ஆகிவிட்ட........
மைந்தர்களே உங்களுக்கு
மணிமகுடம் இக்கவிதை.

கையேந்தி வாழ்வதுவும் – மாற்றான்
கால்பிடித்து வாழ்வதுவும்
பொய்யுரைத்து புகழ்பாடி
புகழ்பெற்று வாழ்வதுவும்
எம்மினத்திற்கிழிவென்று
எண்ணித் தலைநிமிர்ந்து களமாடி
மண்மீட்கும் உரிமைப்போரினிலே
மகிழ்வோடு நின்னுயிர் ஈந்து
எம்மினத்தின் விடிவுக்காய்
ஏற்றவோர் வழிஅமைத்த – மைந்தர்களே!
உங்களுக்கு இக்கவிதை மணிமகுடம்.

சாகவில்லை நீங்களென்றும்
வாழுகின்றீர் தமிழர் நெஞ்சிலென்றும்
உணர்வுகொண்ட தமிழர்நெஞ்சில்
உடலில்ஓடும் குருதியானீர்.

படிப்பகம்

www.padippakam.com



பாட்டெழுதும் கவிஞர்களின்
பேனாவில் மையுமானீர் – அதனால்
மைந்தர்களே! உங்களுக்கு
மணிமகுடம் இக்கவிதை..

உம்மை எண்ணா மனிதர்
உண்மையிலே தமிழரில்லை.
உம்வீரம்போற்றாதார்
உருக்கிடும் பொருளாவார்.
நறுமலரின் மணம் நுகரா
நானிலத்து அகறிணையே – அதனால்
மைந்தர்களே! உங்களுக்கு
மணிமகுடம் இக்கவிதை.

வாழ்வுண்டு உங்களுக்கு – வையகத்தில்
தமிழர் வாழும்வரை.
புகழுண்டு உங்களுக்கு
பூவுலகில் தமிழுணர்வு உள்ளவரை.
தமிழர் நெஞ்சிலென்றும்
எழுந்துநிற்பீர் மாவீரராய் – அதனால்
மைந்தர்களே! உங்களுக்கு
மணிமகுடம் இக்கவிதை.

∴∴∴

படிப்பகம்

www.padippakam.com



## பகைதனைச்சாடு-அன்புப் பாதையைப்போடு!

நாடும் அழிகிறது!
நம்மினமும் அழிகிறது!
பாடுபட்டு வளர்த்த—நம்
பரம்பரையும் அழிகிறது!
எதிரியின் எண்ணத்தில்—ஒரு
ஏற்றமும் தெரிகிறது—அதனால் தமிழா!
பகைதனைச்சாடு—நமக்குள்
அன்புப்பாதையை நீயும் போடு!

நம்முன்னோர் சரித்திரங்கள்—இன்று
நம்முன்னே பாடங்கள்.
வேற்றுமையில் தொடர்ந்துவிட்ட
எத்தனையோ வேதனைகள்.
எத்திசையும் திரும்பிப் பார்!
ஏற்றபதில் அது கூறும்.—அதனால் தமிழா
பகைதனைச் சாடிவெல்லு—நமக்குள்
அன்புப் பாதையை நீயும் போடு!

களத்தினில் நிற்போரல்ல—தாயின்
கருவினில் இருப்போர் தானும்—நம்
எதிரியை வென்றுநமக்கோர் நாட்டை
எடுக்கவே எண்ணம் கொண்டார்.
மக்கள் சக்தியே ஆயுதமாய்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



மதித்து நாம் களத்தை நோக்க—தமிழா
பகைதனைச் சாடு! வெல்லு—கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!

வேற்றுமை தன்னில் ஒரு
ஒற்றுமை நீயும் தேடு!
சாற்றிடு பறை முழங்கு!—நம்மவர்
நாடுவர் எதிரிப் படையை;
தேடியே அழிக்கும் படையாய்.
ஓடியே வந்து நிற்பர்—அதனால் தமிழா!
பகைதனைச் சாடு!வெல்லு!—கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு.

தலைமைகள் நமக்கெதற்கு?
தமிழர் விடுதலைதானே வேண்டும்.
போதனை நமக்கெதற்கு?—தமிழர்
வேதனை தீரல்வேண்டும்.
அடம்பன் கொடிபோல—நாம்
அனைவரும் அணிதிரண்டு—தமிழா!
பகைதனைச் சாடு வெல்லு—கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!

தற்கொடைப் படையாய் முழுத்
தமிழரும் மாறவேண்டும்
எரித்திடும் நெருப்பாய் மாறி—நம்
எதிர்வினை அழிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்த்தாயின் அரியணையை
எம் சந்ததி காணவேண்டும்! – அதற்காய்
பகைதனைச் சாடு! வெல்லு! – கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!

நமக்கொரு பகைமை உண்டு – ஆனால்
நமக்குள்ளே பகைமை வேண்டாம்.
நாம் ஏறிய வண்டிக்கு – சக்கரம்
எதிரியாய் மாறவேண்டாம்.
அண்ணன் தம்பியின் சாடலாலே – தமிழன்னைக்கு
அன்றைய திரௌபதிநிலையும் வேண்டாம்!
வேப்பிலைச் சாறாய் மக்கள் – மன
வேதனை நீளவேண்டாம்.
தேன்தோடைச் சாறாய் மாறி – தமிழர்
தேறுதல் காணவேண்டும். – ஆதலால்
பகைதனைச் சாடு! வெல்லு! – கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!

சடப்பொருள்தான் பூவரசு – அதன்
சாதனையோ மிகப் பெரிது.
நீர்விட்டு வளர்த்தவன் கட்டை எரிய
நிலக் கட்டையாய் தானுமது எரிகிறது.
சடப்பொருட்கள் சாதனையில் உயரும்போது – நம்
உயர்திணைகள் ஏனோதான் இதையுணரார்? – ஆதலால்
பகைதனைச் சாடு! வெல்லு! – கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!

www.padippakam.com



எத்தனை பலமிருந்தும்
எம்முள் ஒற்றுமை குன்றிவிட்டால்
நோய்கொண்ட சேயைப்போல
நம் நோக்கமும் தளர்ந்து போகும்.
காற்றினில் அள்ளப்பட்ட
கப்பலாய் பயணம் மாறும்—எனவே
பகைதனைச் சாடு!வெல்லு!—கூடவே
அன்புப் பாதையை நீயும் போடு!—தமிழா
அன்புப் பாதையை நீயும் போடு!!

❖❖❖.....தை 1993ல் பூவரசு சஞ்சிகை நடாத்திய
கவிதைப் போட்டியில் முதற்பரிசுபெற்ற கவிதை................

❖❖❖

## சுகம்

அகதி வாழ்வோ—பணம்
ஆயிரம் தந்தது.—ஆனாலும்
அந்தப் பாய் தந்த சுகமதை—இந்த
பஞ்சணை தரவில்லையே!

❖❖❖

## வெற்றி தமிழனுக்கே

பறவைகளுக்கும் தமிழனுக்கும்
போட்டிவைத்தால்.....வெல்வது தமிழனே;
எதிலெனில்......?நாடுவிட்டு நாடு பறப்பதில்.

❖❖❖

www.padippakam.com





## அன்றும் இன்றும்

அன்றெனக்கம்மா அமுதூட்டினாள்
ஆகாயத்து அம்புலியைக் காட்டி;
இன்றெனது பிள்ளைக்கு அகதிக் கஞ்சி
ஊட்டுகின்றேன்
ஆளவந்தார் ஹெலியைக் காட்டி.

❖❖❖

## கண்ணீர்

பன்னீரில் குளிக்கவந்தோரெல்லாம்
.......கண்ணீரில் குளிக்கின்றார்
தினம்.....தினம்....இன்று
கண்ணீரில் குளிக்கின்றார்

❖❖❖

படிப்பகம்

www.padippakam.com



**என் மண்**

வானம் குடைபிடிக்க
வெண்ணிலவு ஒளிகொடுக்க
மலரினங்கள் மணம் கொடுக்க
வண்டினங்கள் தேன் குடிக்க
நல்லூரான் மணிகேட்டு
நம் அன்னையர்கள்
தட்டோடு நடைபயில
வெள்ளைநிற சீருடையில்
பிள்ளைகளும் பள்ளிசெல்ல
நந்தவனமாய் இருந்ததெந்தன் மண்.
இன்றோ......வானம் தனைமறைத்து
வல்லூறு குடைபிடிக்க வானதைக் கிழித்து
ஹெலி வந்து குண்டடிக்க
மலரினங்கள் சோர்ந்து விழ
வண்டினங்கள் குண்டுபட
நல்லூரான் கோபுரமும்
நாலிரண்டாய் உடைந்துவிழ
அன்னையர் நெருப்போடு
அடிவயிற்றை பிடித்திருக்க
பள்ளிசென்ற பிள்ளைகளும்
வெண்வானில் மறைந்துவிட
நாய் நரிகள் ஊளையிடும்
வெந்தவனமானதன்றோ
எந்தனது சொந்தமண்.

படிப்பகம்

www.padippakam.com



## சந்ததி

கொழுந்துவிட்டு எழுந்தெரியும்
கொடிய இனவாதத்தீயே!
இன்னுமா உனக்கு அகங்காரச் சிரிப்பு?
அடக்காயா உன்கோட்டையை நினைத்து?
இல்லையெனில்
ஆறாய்ப்பாயும் எம்மவர் கண்ணீர்
அழிக்கும் உன்னாட்சியை
அழிக்கும் உன்னாட்சியை.

கொடிதனை ஏற்றிவிட்டு
வெடிதனை வெடிக்கச் சொல்லி
ரசித்தாயே நீயும் தொலைக்காட்சியில்
வெடிக்கட்டும் தமிழர் தலைகளென்றா?
துன்பத்தில் துடித்திட்ட ஆட்டுக்காய்
துடித்திட்ட சித்தார்த்தன் போர்வையில்
துடித்திடத் துடித்திட
அப்பாவைக் கொன்ற .....
கண்டிக்காவிகள் பலர் முன்னே..!

அன்று உன் அப்பா நினைத்தார்–எம்
அன்னைத்தமிழை அழித்திட...
அரியணை அகற்றிட.....பின்
அம்மா நினைத்தா...எம்
கண்போன்ற கல்வியை அழித்திட

www.padippakam.com



எம் கல்வியின் உயர்வினைத் தடுத்திட
கல்லூரிக் கதவினை பூட்டினா........

இன்று
நீயுமோ நினைக்கிறாய்
எம்மினத்தையே அழித்திட....
எம்மண்ணை அடக்கியே ஆண்டிட.....
முடிந்ததா.? முடியுமா.....?
சுதந்திரத்தீயில்....சுடுபட்டு......
புடம்போட்ட எம்தமிழ் மறவர்முன்
முடிந்ததா..? முடியுமா.......?
எம்தமிழ் மறவர்முன்! மறவர்முன்!

www.padippakam.com



**சத்தியம் காரீரோ!**

குமுறும் வானமே....!
கொந்தளிக்கும் கடலே.....!
எரியும் தீயே.....!
எழுந்தடிக்கும் புயலே.....!
அன்னைத் தமிழ்காக்க,
என்னினத்தின் துயர்போக்க,
அகிலம் மறந்துபோச்சு.
தர்மத்தாய் பிள்ளைகளே
சத்தியம் காரீரோ!
நாட்டுமக்கள் தலையினிலே
நாளும் மிளகாய் தனையரைத்து
தேர்தல் வரும்போதினிலே
தேனோடு பாண்கொடுத்து
நரிக்குணத்து மூளையுடன்
நாடாளும் சித்தார்த்தர் செயல் கண்டும்
அகிலம் கண்மூடி நிற்கிறதே.....!
தர்மத்தாய் பிள்ளைகளே
சத்தியம் காரீரோ....!
உயர்திணைகள் கூடிப்பேசி
அஃறிணைகள் வேலைபோலே
கண்ணுறங்கும் மக்கள்மீது
கனத்தகுண்டு போடுவது
தர்மமென்று தானுலகம்
தான்னினைத்துக்கொண்டதுவோ
அதனால் ....தர்மத்தாய் பிள்ளைகளே சத்தியம் காரீரோ!

www.padippakam.com



## தெய்வத்தின்தீர்ப்பு

கோபுரங்கள் எரிந்துபோச்சு.....
கொடிமரங்கள் சரிந்துபோச்சு.....சாமி
கொலுமண்டபமும்தரையாகித்தான் போச்சு....
மணியோசை கேட்டதூரமெல்லாம்
மக்களழும் குரலோசை தானாச்சு......

பூப்போட்ட பூசகரும் பயத்தால்
புலம்பெயர்ந்து தான் போக – பெருமாள்
காப்பான் என நம்பி, கரம்கூப்பி
காத்திருந்த பக்தர்களும்......
இரக்கமற்ற கொடியவனின்
குண்டுபட்டு
எமனுடனே தான்போக
எஞ்சிய சிலரோடி.......பெருமாளே
எமைக்கார் .....என்றுநிற்க.....
காக்கும் கடவுள் பெருமாளும்....மெல்ல
கண்ணைத்திறந்து....."பக்தா!..கலங்காதே
பொறுத்திடு...கொஞ்சம் பொறுத்திடு......
தர்மம் நிலைத்திட நீதிதழைத்திட....
சத்தியம் வென்றிட....அதர்மம் அழிந்திட.....
நானும் பாஞ்சஜன்மம் ஒலித்திட
இன்னும் சிலகாலம் இருக்கு
பொறுத்திடு பொறுத்திடு" என்றானாம்.

⁂⁂

www.padippakam.com



## கிழக்கேன் விடிகிறது

உலகம் இருண்டுபோச்சு
உண்மை மறைந்துபோச்சு
நீதி அழிந்துபோச்சு
மக்களோ நிர்க்கதி நிலையுமாச்சு–ஆனால்
நீதியில்லா உலகுக்கு.......
கிழக்கேன் விடிகிறது?
உலக நீதிசபையேன் கூடுகிறது?

பசிக்கு உணவில்லை,
படுத்துறங்க இடமில்லை,
பச்சிளம்குழந்தைக்கு பால் இல்லை,
நோய்க்கு மருந்தில்லை,
மனிதவுயிர்க்கு மதிப்பில்லை,–இதை
தட்டிக்கேட்க ஆளில்லை.
ஆனால்
நீதியில்லா உலகுக்கு
கிழக்கேன் விடிகிறது?
உலகசபையேன் கூடுகின்றது?

அகிலமெல்லாம் இன்று
அடக்குமுறைக்காரன் பையில்.
அவன் நினைப்பெல்லாம் மானிடத்தை.
அழிக்கின்ற அணுஆயுதத்தின் கையில்
பாரெல்லாம் பறக்கின்ற விமானம்,கப்பலின்

www.padippakam.com




பாரமெல்லாம் அழிவு குண்டுகளின் பாரம்.
ஆனால் இந் நீதியில்லா உலகிற்கு
கிழக்கேன் விடிகின்றது?
உலகசபையேன் கூடுகின்றது?

அநியாயத்தை தடுத்திட
அதிகாரம் இல்லாச் சபைகள்
ஆள்வோனைத் தட்டிக் கேட்க
ஆண்மையில்லாத் தலைமைகள்
கூடியென்பலன்? கூடியென்பலன்?
இவர்கள் குளிர் காய்ந்து—கோப்பி குடித்தபடி
கூடிமகிழ்வதற்கா
கிழக்கு விடிகிறது?

கிழக்கேன் விடிகிறது?
கிழக்கேன் விடிகிறது?

∴∴∴





படிப்பகம்

www.padippakam.com



## வெந்தவனம்

கோடிபல சேர்க்கவெண்ணி
ஓடிவந்தேன் தாய் மண்ணைவிட்டு.
கோடி ஏதும் சேர்க்கவில்லை:
தேடியதோ கோடி துன்பம்.
பரம்பரையாய் வாழ்ந்தவீடு
பாழ்படுவான் குண்டுபட்டு
அழிந்ததென்ற சேதிகேட்டு
அடைந்ததுன்பம் கோடியாச்சு.
பாடம் தந்த பாடசாலை,
பக்திசொன்ன பெருங்குளத்துக் கோவில்,
பாசம் சொன்னோர் ஊர் உறவு



பாழடைந்த சேதிகேட்டு–மனம்
வெந்தவனம் ஆகிப்போச்சு.
பெற்றவர்கள் கடன் முடிக்கா
பிள்ளையாய் தானாச்சு,
உதிரத்து உறவுகளும்
உடனிருந்த ஊரவரும்
அகதிநிலை சொந்த மண்ணில் தானாச்சு.
இச்சுமைகள் அத்தனையும்– என்
நெஞ்சச்சுமை ஆனதினால்..................
ஊரெல்லாம் நந்தவனம்–என்
உள்ளமெல்லாம் வெந்தவனம்.
நந்தவனம் பூப்பூக்கும்: –என்
வெந்தவனம் ஏது பூக்கும்?

படிப்பகம்

www.padippakam.com



## நிகழ்வுகள்

கோட்டையில் எழுந்த தீ
கொடிகாமம் தனில்வாழும்
அகதியின் உள்ளம் கண்டு
" கொண்டு வா தண்ணீர்...
கொட்டிட என்றதுவாம்.

அமாவாசைக் காலக் கிராமத்து
மழைக்கால இருட்டு
அயலான் உள்ளம் கண்டு
அலறித்துடித்ததாம் அதிர்வோடு.

பெருங்காட்டு புத்திருந்து
புறப்பட்ட விசநாகம்
பக்கத்தான் பார்வைகண்டு
பயந்தொதுங்கி ஓடியதாம்.
காட்டு நரிஒன்று
கடுந்திட்டத்தோடு ஸ்ரீலங்கா
நாட்டுக்குள் சென்றதாம்.
ஆள்வோர் கூறும் தீர்வுத்திட்டம் கேட்டு
திசைதெரியா தோடியதாம்.
நயவஞ்சகனொருவன் கை
நஞ்சுபட்ட கூர்வாளொன்று
நாடாழ்வோர் தீட்டும் திட்டம் கண்டு
நாணித் தலை குனிந்ததாம்.

படிப்பகம்

www.padippakam.com



ஆலைக்குள் சென்ற கரும்பு
அங்கிருந்து வந்தபின்பும்
ஏங்கித்தான் நின்றதாம்.
சீருடையார் கையில் அகப்பட்ட
செந்தமிழன் நிலைகண்டு.

சூரியகந்தைப் புதைகுழி எலும்புக்கூடு
சுதந்திரமாய் எழுந்து ஏளனமாய் சிரித்ததாம்.
தினந்தினம் வாவியில் தமிழர் சடலம்
வரும்வேகம் தனைக்கண்டு.
∴∴∴



படிப்பகம்

www.padippakam.com



## நெஞ்சு பொறுக்குதில்லையே!

கஞ்சிக்கு உப்பு
கடன்பட மறுத்து
உப்பில்லாக் கஞ்சி
உண்ட எம்மினம் இன்று
அரைவயிற்றுக் கஞ்சிக்கு
அடுத்தவன் கைபார்க்கும்
அவலநிலையறிந்து
நெஞ்சு பொறுக்குதில்லையே! – என்
நெஞ்சு பொறுக்குதில்லையே!


மண்கும்பான் மணல்
மகிமையில்லையென்று
பளபளக்கும் நல்ல
பாலியாற்று மணல்கொண்டு – தம்
பரம்பரைக்கு வீடுசெய்தஎம்மினம்
இன்று

பாதையோரத்து.....
அரசடியும்ஆலடியும்
ஆலயமும் பள்ளியென்றும்
அமர்ந்திருக்கும் நிலையறிந்து – என்
நெஞ்சு பொறுக்கிதில்லையே!
நெஞ்சு பொறுக்குதில்லையே.

படிப்பகம்

www.padippakam.com





கொடியவன் செயலால்
குருதிச்சேற்றிலே தாய்மண்
குத்தும் சப்பாத்துக்கொண்டு
கிழிக்கிறான் மண்ணைமதை.
ஆனால் அங்கே
ஓடும்குருதியில் மீன்பிடிக்க
எம் குறுமதி தமிழர் சிலர்
கூடவே நிற்கின்றாராம் தூண்டிலோடு
சிலிர்த்திடும் இச்சேதிகேட்டு—என்
நெஞ்சு பொறுக்குதில்லையே!
நெஞ்சு பொறுக்குதில்லையே!

ஆண்டநாம் மீண்டும்
ஆளவெனவந்தோர்
அன்னைத்தமிழுக்கு அரியணையை கேட்டோர்
தமிழ்த்தாயின் கை விலங்கொடிக்க வீறுகொண்டோர்
இன்று
அம்மாவின் கொடிய இனவாத அரியணைக்கு
ஆலவட்டம்வீசி சரியாது தோள்கொடுத்து
சங்கக்கடையாள் தாம்பதவி கேட்கும்
சங்கதியை நானறிந்து
என்
நெஞ்சு பொறுக்குதில்லையே!
நெஞ்சு பொறுக்குதில்லையே!
....

படிப்பகம்

www.padippakam.com



## தஞ்சம்

தனித்துவம் தமிழர்கள் தஞ்சம்.
தனித்துவம் கொண்டோர் என்ற
தலைக்கனம் தலையிலேறி—தமிழர்
தமக்குள்ளே தனித்துவம் தாமும் கண்டு
கொட்டிய கடுகைப்போல
குலைத்திட்டார் தம் ஒற்றுமையை.
வேற்றுமைப் படியில் ஏறி
வேறு வேறு திசைதனைப் பார்த்து நின்று
பார்த்திடா தேசமெல்லாம்
பச்சையாய் தானுமெண்ணி
பறந்திட்டார் அத் தேசமெல்லாம்.
இதனாற்றானோ...
தரணியில் பாதி தேசம்...
தமிழரின் வாழ்க்கை தஞ்சம்.
அகதியாய் வாழும் நாட்டில்
ஆயிரம் போட்டிச்சங்கம்
ஒற்றுமை என்னவிலை
என்றவர் கேட்கும் நிலை.
இன்னிலை மாறும்வரை
தமிழர் போக்கிடார் தஞ்சநிலை.

படிப்பகம்

www.padippakam.com




## எம் புதியபணி என்ன?

வங்கக் கடல் சீறி
பொங்கி எழுந்ததுபோல்–ஈழத்
தங்கத்தமிழினம் சீறி
நாலிரண்டு கோடித்தமிழர்–ஒரு
நாளுமெண்ணா உரிமைப்போரை
தாமேந்தி நிற்கின்றார் ஈழத்தில்.
ஆனால்
நோய்க்கு மருந்துசெய்ய
நோக்கமில்லா சித்தாத்தர் ஆட்சி
தெருப்பிச்சைக்காரன் காற்புண்ணாய்
பிரச்சனையை பூதமாய் தான்காட்டி
குண்டுகளைப்போட்டு எம்மினத்தை
கொன்று குவிக்கிறார் ஈழமதில்.
ஆனால் அது தெரிந்தும்
உத்தமர்கள் நாங்களென்று
உலகத்தை நம்பவைத்து
உதட்டளவில் ஜனநாயகம் பேசிவரும்
உலகப் பெருநாடுகளோ
பொருளாதார உதவி என்ற
போலிப்பட்டாடை தனைமூடி
தாம்செய்யும் ஆயுதத்தை தாராளமாய் விற்று
தமிழரை அழிப்பதற்கு தாமே துணையானார்.
இந்நிலையில்
தன்னின உரிமைகேட்டு–எதிரியை

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com



தனித்துநின்று வேள்விசெய்து......
கல்லடுப்பு மூட்டிகஞ்சிதனைக் காச்சுகையில்
செல்லடிபட்டு சிதறுகின்ற எம்மினத்தார்
விடியலுக்கு............
பால்பழங்கள் தான்புசித்து
பஞ்சணையில் படுத்துறங்கும் எம்
புலம்பெயர்ந்த தமிழர்களின்
புதியபணி என்ன? புதியபணி என்ன?
....

## துடிப்பு

பூக்கவேண்டும் பூக்கவேண்டும் நாளும்
புவிவாழும் மனிதர் நெஞ்சில் அன்பு.
வளரவேண்டும் வளரவேண்டும் நாளும்–நல்ல
ஒற்றுமையை வளர்த்தெடுக்கும் நினைப்பு.
மலரவேண்டும் மலரவேண்டும் நாளும் நல்ல
உள்ளமதை மலரவைக்கும் சிரிப்பு.
துளிரவேண்டும் துளிரவேண்டும் நாளும்–நம்
பிறந்தமண்ணை மீட்டெடுக்கும் துடிப்பு.
தொடரவேண்டும் தொடரவேண்டும் நாழும்–தமிழ்
தொண்டினாலே உண்டாகும் பூரிப்பு.
எரியவேண்டும் எரியவேண்டும் நாளும் வீட்டு
அடுப்பினிலே மட்டுமே நெருப்பு.
அழியவேண்டும் அழியவேண்டும் நாளும்
அடுத்தவனை கெடுக்கின்ற வெறுப்பு.
நிறுத்தவேண்டும் நிறுத்தவேண்டும் என்றும்
இனஒற்றுமையை தடுக்கின்ற இணைப்பு.

www.padippakam.com



## புலம்பெயர்ந்து வந்ததனால்

தந்தையவர் குருதி புலம்பெயர்ந்து
தாய்வயிற்றில் வந்ததனால்
தாய்க்கு நீ மகனானாய்
தாய்வயிற்றில் தானிருந்து புலம்பெயர்ந்து
பிள்ளையும் நீ வந்ததனால்......தாய்மண்ணை
மீட்கும் படைக்கு துணையானாய்.

முள் கொண்ட பெருங்காட்டு
மூங்கிலும் புலம்பெயர்ந்து வந்ததனால்
புல்லாங்குழலாகி,புட்டவிக்கும் கருவியாகி
வில்லுவண்டிக் கூடார வில்லாச்சு.
பூமியடியிருந்து தங்கம் புலம்பெயந்து
பூவுலக மாந்தர் பூணும் பொருளாச்சு.
முல்லை,மல்லி,ரோஜாவும் புலம்பெயர்ந்து வந்ததனால்
மணமக்கள்சூடும் மணமாலை தானாச்சு.–அந்தோ
எம்தமிழ்,எம்மினம் புலம்பெயர்ந்து வந்ததனால்
என்னாச்சு?
முதுகெலும்பு தான் முறிந்த முதியவர் நிலையாச்சு.

புலம்பெர்ந்து வந்ததனால்...காட்டில்
துணையிழந்த கலையானோம்–சுடு
காட்டில் கொள்ளியுடன்சுற்றிவரும் சொந்த
மகனின் மனநிலை நாமானோம்.
பெருமைகொண்ட எம்மொழியை–எம்முன்னோர்

www.padippakam.com



பேணிக்காத்த கலாச்சாரத்தை,கலையை
பேசிட பேணிட முடியாது,உள்ளத்தே ஊமையாகி
மாற்றான் மொழிபேசி மகிழ்வுகொள்ளும் நிலையானோம்.
புல்லுக்காய் பசுவும் மறுகாடு
புலம்பெயர்ந்து வந்ததனால் மறந்ததுவா தன்வீடு?
நெல்லுக்காய் பறவையினம் புலம்பெயர்ந்து
நெடுதூரம் வந்ததனால் மறந்தனவா தம்கூடு?
இதுபோல......பணத்துக்காய் புலம்பெயர்ந்து
தாய்மண்ணை தான்மறந்த பரிதாபத்தமிழர்களின்
சிந்தனைக்கு
தாய்மண்ணை அன்றொருநாள்
அடிமைகொண்டான் வெள்ளையெம்மை
அவனைவிரட்டிடவே நாம்தொடுத்தோம் தொல்லை.
இன்றுநாம் அகதியானோம் அவன் எல்லை.
என்றுமவன் விரட்டிடவே
தருவான் எமக்குத் தொல்லை.

புலம்பெயர்ந்து வந்ததனால்...நாம்
பொன்கொண்டோம் பொருள்கொண்டோம்,
பெருந்தொகையில் கார்கொண்டோம்,
தங்கத்தால் கத்திசெய்து பிள்ளைக்குதான்கேக்கு
வெட்டிவிட்டோம்....இதுபோல
குங்குமத்தின் மகிமைதனை
குலமகளும் மறந்துவிட்டாள்,
கரியநெடுங்கூந்தல் கரைச்சலென்று
கன்னியரும் அறுத்துவிட்டார்.–சூழ்நிலையால்

www.padippakam.com




சீரான பட்டுச்சேலை பாரமென்று கிழவியரும்
ஜீன்சுக்குள்புகுந்துவிட்டார்.
புலம்பெயர்ந்து வந்ததனால்புதியபெயர் கொண்டோம்,
சுதந்திரமாய் பறந்தவெம்மை
ஒரு கூட்டுக்குள் தானடைத்தோம்.
ஊருக்காய் உறவுக்காய் ஒருகணமும்
ஊராலும் உறவாலும் மறுகணமும்
உள்ளம் தானுடைந்து உருக்குலைந்து போகின்றோம்.
ஆனால்.....
மொத்தத்தில்
என்னாச்சு எங்களுக்கு.....?
என்னாச்சு எங்களுக்கு.......?
∴∴∴..........................................2ம் பரிசுக்கவிதை.....பூவரசு – 95

படிப்பகம்

www.padippakam.com





**பெருமூச்சு**

தன்கனியின் தாக்கத்தால் தலைசரித்து
மண்மூடிக்கிடக்கின்ற மிளகாய்ச்செடிபோல
நீலநிறவானமதை
வெண்முகில்கள் தான்மூட
ஈழத்து இளம் விதவை
ஒருத்திவிட்டபெருமூச்சுப்பட்டு
மழைத்துளியாய் தான்விழுந்து
நிலமடந்தை தனைநனைக்க
புல்,செடிபூண்டு மரத்தோடு
முள்ளினமும் தான்சிரிக்க
வண்ணங்கள் பலகொண்ட கலாச்சார
நெல்நெருஞ்சித்தோட்டத்தில்
வாடிநிற்கும் வெண்துயில் ரோஜா
மழையில் நனைவதெப்போ?
கலாச்சாரம் விழிப்பதெப்போ?

****

www.padippakam.com



## பொதுமொழி



அன்பு என்பது ஒருமொழி
அகிலத்தில் அதுவே பொதுமொழி
உருவமில்லாத ஒருமொழி
உலகத்தில் அதுவே முதல்மொழி.

ஊர்வன பறப்பன நடப்பனவும்
நீரில்வாழும் உயிரினமும்
உறவினில் பேசும் பொதுமொழி
இதுவே அன்பெனும் முதல்மொழி.

அன்பெனும் இந்த மொழி கொண்டு—மக்கள்
ஆண்டிடவேண்டும் அகிலத்தை.
ஆண்டிடும் மக்கள் அனைவரும்கூடி
வாழ்ந்திடவேண்டும் ஒரு வீட்டில்.

பேசும் மொழியாய் அன்பெனும் மொழியே
நிலைத்திடவேண்டும்.
உயர்ந்தவன் தாழ்ந்தவன்பேதமின்றி உறவுக்கு
தடையாய் நிறமுமின்றி
மக்கள் அகதி நிலையுமின்றி
மனிதனை மனிதனாய் வாழவைக்கும்
மகிமைகொண்ட பொதுமொழி
அன்பெனும் இந்த முதல்மொழி.

## உணர்வு

உடைந்துபோன உள்ளங்கள்
உருக்குலைந்துபோன உருவங்கள்
கடந்துபோன உறவுகள்
கரைந்துபோன கனவுகள்.



ஏக்கம் நிறைந்துபோன இரவுகள்
தூக்கம் மறந்துபோன விழிகள்
பசிமறந்துபோன வயிறுகள்
ருசி மறந்துபோன நாக்கள்.

நிச்சயமற்றுப்போன பயணங்கள்
நிம்மதி இழந்துபோன வாழ்க்கை
ஒளி இழந்துபோன இல்லங்கள்
இத்தனையும் என் தாய்மண்ணில்தான் – என்றாலும்

தாய்மண்ணின் உயர்வுக்காய்,உரிமைக்காய் போராடும்
தமிழனின் தன்மான உணர்வுமட்டும்
எண்ணைபட்ட தீயாய் எழுந்து எரிகிறது – ஆனால்
இங்கே என்ன நடக்கிறது?
நெஞ்சத்தை கொஞ்சம் தொட்டு
எண்ணித்தான் பாருங்களேன்!
எண்ணித்தான் பாருங்களேன்!!

www.padippakam.com



## மறந்திட்ட மனிதர்கள்

கடையிலே சப்பாத்து
கண்ணைப் பறிக்கிறது
காசைக்கொடுத்து காலில் மாட்டினால்
காலைக் கடிக்கிறது?
ஏனிது?
மனிதன் தன் அளவை மறந்ததா?
குதிரையின் நினைப்போ –தான்
மனிதனைச் சுமப்பதாய்–இருக்கும்
மனிதனின் நினைப்போ
தான் குதிரையை உதைப்பதாய்.
ஏனிது?
மனிதன் தன் இருக்கையை மறந்ததா?

பசுவின் நினைப்போ
தான் மனிதர்க்குபாலைக் கொடுப்பதாய்.
பாலைஎடுக்கும் மனிதனின் நினைப்போ
பசுவிடம் பாலை எடுப்பதாய்.
ஏனிது?
மனிதன் தன்
மனிதத்தை மறந்ததா?
மனிதன் தன்
மனிதத்தை மறந்ததா?

∴∴∴

படிப்பகம்

## முயற்சி

பம்பரம்போல மற்றவர் சுற்ற
சுற்றி மகிழும் மனிதா
உன்னுள் நீயாய் உட்கார்ந்திருந்து
உலகில் வாழமுடியாதா? –முயன்றால்
உலகில் வாழமுடியாதா?

காட்டில் வாழும் மிருகம்,பறவை
சேற்றில் தண்ணீர் குடிக்கவில்லையா?
மண்ணால் மூடிய வெல்லம் தன்னை
சின்ன எறும்பும்சுவைக்கவில்லையா?

எண்ணையில் கலந்த நீரை விடுத்து
எண்ணையை எடுத்து
திரி ஒளி கொடுக்கவில்லையா?
பாலில் கலந்த நீரைநீக்கி
பாலை அன்னம் அருந்தவில்லையா?
ஓடும் நீரில் உட்கார்ந்திருந்து
அதுவும் உணவைத் தேடவிலையா?

அஃறிணை,சடப்பொருள்
முயற்சியில் வாழ்கையில்.....
ஆறாம் அறிவை இறைவன்
அருளியதேனோ மனிதா உனக்கு?
அருளியதேனோ மனிதா உனக்கு?

## மறுப்பதுமேன்

தங்கக் காசை
புரட்டிப்புரட்டி தடவிப்பார்க்கிறாய்.
செப்புக்காசை
புரட்டிப்புரட்டி உரைத்துப்பார்க்கிறாய்.
நோட்டுக்காசை
திருப்பித்திருப்பி கோட்டைப்பார்க்கிறாய்.
நடுக்கோட்டைப்பார்க்கிறாய்.
மனிதஉள்ளம்தனை திருப்பிப் பார்க்க
ஏனோ மறுக்கிறாய்? –அவன்
மறுபுறத்தை நீயும் பார்க்க
ஏனோ மறுக்கிறாய்? –மனிதா
ஏனோ மறுக்கிறாய்?

அகத்தின் அழகை
தேடமறந்து – பொய்
உடலினழகை
தேடியலையும் மானுடா! –உடல்அழகு என்பது
தேன்கூடு:அதைத்தொட்டால் குத்தும் தேன்குளவி.
என்பதை நீயும் மறந்ததுமேன்? மறந்ததுமேன்?
மழையைக்கண்டு சிரிப்பது மட்டும் பயிர்தானா?
சில மனிதர் செயலைக் கண்டு
வெறுப்பது மட்டும் மானிடமா? –இதை
எண்ணிட நீயும் மறுப்பதுமேன்?
உணர்ந்திட நீயும் மறுப்பதுமேன்?

www.padippakam.com



## கடமை

காலமறிந்து உதவிசெய்யடா–தம்பி
மனிதநிலையறிந்து அன்பு காட்டடா.
உளமறிந்து உறவுவையடா–நீயும்
உண்மைபேசி உயர்ந்து நில்லடா.

உழைத்துவாழ உறுதிகொள்ளடா–தம்பி
பிறர்உழைப்பில் வாழும் நிலையை மாற்றடா.
உழைத்தகாசு செப்பென்றாலும் காத்துநில்லடா–பிறர்
உழைப்பில்வந்தால் கோடியெனிலும் உதறித்தள்ளடா.

நரியைப்போல குணம் உடையோர்–சிலர்
நாட்டில் வாழ்கிறார் தம்பி–நல்ல
பால்நிறத்து மனதைக்கொண்டோர்–சிலர்
பாழும் சிறையில் வாடுறார்.

நம்பிக் கெட்ட மனிதர் சிலர் கூட்டிலே–பிறரை
நம்பவைத்த மனிதர் சிலர் வீட்டிலே.
நாலுமறிந்து ஞானம் கொள்ளடா–கிழக்குதிக்கும்
ஞாயிறுபோல் உயர்ந்து நில்லடா.

வாழையடி வாழைவரும் வழியைப்பாரடா–உன்னை
வளர்த்துவிட்ட தாய்மொழியின் நிலையைப்பாரடா.
கிழங்கினடி கிழங்குவரும் கிழறிப்பாரடா–உன்
கீழிருக்கும் (உன்)இனத்தை எண்ணி பணிதொடரடா.

படிப்பகம்

www.padippakam.com



உன்னை வாழ்த்தும் உதடுகளை எண்ணிப்பாரடா—
உன் உளமறிய வாழ்த்துவோரை தள்ளிவையடா.
நெற்றிக்கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமே— என
நக்கீரன்போல் நீயும் நீதிகேளடா.

உழைத்துவாழும் கூட்டமென்றும் உந்தன்கரமடா—பிறர்
உழைப்பில் வாழும் கூட்டம் என்றும் எதிரிதானடா.
கீழிருக்கும் மக்கள் கூட்டம் உயர்வு காணவே—தம்பி
வீறுகொண்டு இனத்துக்காக கடமைசெய்யடா.

∴∴∴

**எப்போ**

சந்திரனும் சூரியனும்
சந்தித்தது உண்டா?
சந்தித்ததை கண்டதென்று
சொன்னவர் உண்டா?
கொண்டலும் வாடையும்
கூடிவாழ்ந்தது உண்டா?
கூடிவாழ்ந்ததென்று உரைப்போர்
குவலையத்தில் உண்டா?

www.padippakam.com



நள்ளிரவும் நண்பகலும்
நிலைத்திருந்தது உண்டா?
நிலைத்திருந்தது என்று சொல்வோர்
நானிலத்தில் உண்டா?
உருளுமிந்த உலகமுய்ய
உதவுகின்ற இவைகள்—தம்
உள்ளத்திலே பகைமை கொண்டால்
உலகுருள்வதெங்கே
அதனால்
கண்ணன் தேர்க் குதிரைகளாய்
கடமை ஒன்றே நோக்கமாய்
காலமெல்லாம் ஒன்றுகூடி
கருத்தில் ஒன்றாய் நின்றிட்டால்
தமிழருக்கு நாடுபெற
தான்நினைத்து வாழ்ந்திட்டால்
தமக்குள்ளே தாமுணர்ந்து
தம்வழியை மாற்றிவிட்டால்.......
எம்தமிழர் நெஞ்சத்தில்
எழுந்தெரியும் தீயணையும்
ஒன்றுபட்டு கரமிணைத்து
ஒருவழியில் செல்வதெப்போ?

***

படிப்பகம்

www.padippakam.com



## சொந்தமண்

மாற்றானின் சொத்தான
மரவள்ளித் தோட்டத்தில்
மகிழ்வோடு கூடுகட்டி
மகிழ்ந்திருக்கும் பறவைகளே!

சொந்தக்காரன் அறுவடைக்கு
சொல்லிக்கொண்டோ வருவான்?
அறுவடையை அவன் முடித்தால்
அங்கெமெக்கு இடமேது?

பக்கத்து தோட்டமதில்
பங்கெமக்கு இல்லையென்று
பட்டாசுதான் கொழுத்தி
பறக்கவெமைச் செய்திடுவார்
ஆதலினால்

கள்ளிப்பற்றை என்றாலும்
கவலையின்றிக் கூடுகட்ட – எம்
சொந்த மண்ணே சுதந்திரமாம்
எண்ணிடுவீர் என்நாளும்.

∴∴∴

படிப்பகம்

www.padippakam.com



**என்ன கடன்.....?**

தாய்க்குத் தான்கொடுத்தால் – அது
பெற்றகடன் என்போம்
தந்தைக்கு தான்கொடுத்தால் – அது
வளர்த்த கடனென்போம்.
பாட்டிக்கு தான்கொடுத்தால் – அது
தலைபிடித்துஅணைத்த கடனென்போம்.
குருவுக்குத் தான்கொடுத்தால் – அது
அறிவுக்கு கொடுத்த கடனென்போம்.
தம்பிக்குத் தான்கொடுத்தால் – அது
கூடப்பிறந்த கடனென்போம்.
தங்கைக்கு தான்கொடுத்தால் – அது
அண்ணனின் சீரென்ற கடனென்போம்.
கடைக்காரனிடம் கொடுத்தால் – அது
கடந்தமாதக் கடனென்போம்.
ஆனால்..ஆனால்
நல்லவன்போல் நடித்து
நாள்முழுதும் கூடித்திரிந்து
கூடியிருந்துண்டு குலவி நடந்துவிட்டு
நடுவழியில் மடிபறிக்கும் நரிக்குணவேலைசெய்து
நட்டநடுவிரவில் நார்டுவிட்டு நாடுமாறி
தன்முகத்தை,முகவரியை மறைத்துவிட்ட
வஞ்சகுண நண்பனுக்கு .....இல்லை இல்லை
நஞ்சனுக்கு கொடுத்தகடன்
என்னகடன்.....என்னகடன்....என்னகடனென்போம்?.

படிப்பகம்

www.padippakam.com



## கதை

நடக்குது நடக்குது ஒருகதை
நாட்டிடை நமக்காய் இன்று–அதை
நம்பினால் நம்பினால் நாமும்
நடுத்தெருப் பாய்தான் நாளை.

காக்கையின் வாயில் வடைகண்டு
காட்டுநரி சொன்ன கதையொன்று
பூனைகள் பிளவுதான்கண்டு
புகுந்த குரங்கின் கதையொன்று.

வால் அறுந்த நரியொன்று
வந்துசொன்ன கதையொன்று
சொன்னநரியின் நிலைகண்டு
துள்ளியெழுந்த கிழநரிக்கதையொன்று.

படித்தவர் நாமும் அன்னாளில்
பகுத்தறிவோம் நாமும் இன்னாளில்.
கிணற்று நீரில் நிழல்கண்ட
கிழட்டுச் சிங்கம் போலன்றி

கல்லைப்போட்டு நீர்குடித்த
காக்கைபோலச் செயற்படுவோம்.
சிங்கம்தனை தான்வென்ற
சிறுமுயலின் வழிசெல்வோம்.

படிப்பகம்

www.padippakam.com



## எதிரி

வீரனுக்கு பயம் எதிரி.
விதவைக்கு குங்குமம் எதிரி.
மானுக்கு புலி எதிரி.
மாம்பழத்துக்கு கிளி எதிரி.

மீனுக்கு வலை எதிரி.
மீசைக்கு கூழ் எதிரி.
கீரைக்கு ஆடு எதிரி.
கீரிக்கு பாம்பு எதிரி.

மரத்துக்கோ...
கோடாலிப் பிடி எதிரி.
உனக்கு நான் எதிரி
உன்மனது உனக்கு எதிரி.

இனத்துக்கு இனம் எதிரி.
அயலினத்துக்கு நாம் எதிரி.–நாம்
அனைவரும் தான் எதிரி.
சிங்களர்க்கு தமிழ் எதிரி.
தமிழர்க்கு தமிழரேதான் எதிரி.

∴∴∴

படிப்பகம்

www.padippakam.com



## எது அழகு

யானைக்கு கால் அழகு!
பானைக்கு வாய் அழகு!
மானுக்கு தோல் அழகு!
மாமனிதர்க்கு எதுவழகு?

மயிலுக்கு தோகை அழகு!
மந்திக்கு செயல் அழகு!
மரத்துக்கு இலை அழகு!
மாமனிதர்க்கு எதுவழகு?

பேச்சுக்கு மொழி அழகு!
பேனைக்கு எழுத்து அழகு!
நத்தைக்கு கொம்பு அழகு!
நல் மனிதர்க்கு எதுவழகு?

சேலைக்கு நூல் அழகு!
செய்திக்குத் தாள் அழகு!
கத்திக்கு பிடி அழகு!
கற்ற மனிதர்க்கு எதுவழகு?

வீட்டுக்கு நிலை அழகு!
வீதிக்கு ஒளி அழகு!
வண்டிக்கு சில்(லு) அழகு!
வீரமனிதர்க்கு எதுவழகு?

படிப்பகம்

www.padippakam.com



## மனத்துடிப்பு

குளக்கரையின் அருகிருந்து சுதந்திரமாய்
குளிக்கிறதாம் காகம் என்தாய் மண்ணில்.
பெருங்கடல் வழிந்தோடும் வாவியிலே துள்ளிக் –
குதிக்கிறதாம் மீனினங்கள் சுதந்திரமாய்
என்தாய்மண்ணில்.
வேர்பதித்து, நிமிர்ந்து, நின்று
பூக்கிறதாம் முற்றத்து மாமரங்கள் சுதந்திரமாய்
என் தாய்மண்ணில்.
காய்க்கிறதாம் கோடிக் கறிமுருங்கை
சொரிந்து சுதந்திரமாய்.
ஊர்பெருமை தனைச் சொல்லி காய்களுக்காய்
சிலிர்த்து நிர்க்கிறதாம்
கிணற்றடி நொங்கிச்சி என் தாய்மண்ணில்.
இத்தனையும்
என் அப்பாவின்
இனிப்பான செய்திகள்தான்
ஆனால்
தரைவிழுந்த மீனாக
துடித்து வீழ்கிறது என் மனம்;
என் தாய்மண்ணை மிதிப்பதற்காய்....
கொடுப்பாரா ஆள்வோர்கள்
சுதந்திரத்தை எந்தனுக்கு.....தாண்டிக்குளம் தாண்டி
என் தாய்மண்ணைப் பார்ப்பதற்கு.

∴∴

www.padippakam.com





## எமக்கில்லை பௌர்ணமி

தமிழ்காக்க வந்தவர்கள் எல்லோரும்
தங்கள் நலன் காக்க எண்ணி
போட்டி பொறாமை பதவி என்னும்
சாக்கடையில் வீழ்ந்துவிட்டால்
எமக்கேது பௌர்ணமி?
என்றுமோ எமக்கு அமாவாசை?

அன்றுமுதல் இன்றுவரை இனங்காக்க
அடுத்தடுத்து வந்தவர்கள்
தங்களுக்குள் ஒற்றுமையை
தான் வளர்க்கத் தவறியதால்
எங்களுக்கில்லை பௌர்ணமி.
என்றுமோ எமக்கு அமாவாசை?

நாளைய சமூகம் நமக்குண்டு என்று
நேற்றய சமூகம் நினையாக் காரணத்தால்

www.padippakam.com



இன்றைய சமூகம் இடர்பட்டுத் துடிக்கிறது.
இதற்கோர் விடிவை எவர் தருவார்?
எங்களுக்கில்லை பௌர்ணமி...
என்றுமோ எமக்கு அமாவாசை?

சீர் கெட்டுப்போன சீதனக் கொடுமையால்
சீரழிந்துபோன கன்னியர் கண்ணீரும்
வாலிபத்தின் வசந்தகால நினைவுகளை
தாயகத்தின் விடுதலைக்காய்
அர்ப்பணித்த இளைஞர்களும்
பிள்ளைபெற்று பெயரிட்ட பெற்றோர்கள்
கொள்ளிவைக்கப் பிள்ளை இன்றி..
கதறி அழும் காட்சிகளும்
தினம்தினம்.......
எம் நெஞ்சை திடுக்குறச் செய்கையிலே...
எமக்கேது பௌர்ணமி....?
என்றுமோ எமக்கு அமாவாசை....?

∴∴∴

படிப்பகம்

www.padippakam.com



**சிந்தாதா கண்ணீர்?**

நிழலுக்கு ஆலும்
நினைப்புக்கு வேம்பும்
நீருக்குத் தென்னையும்
கூழுக்குப் பனையும்

கட்டைக்கு பூவரசும்
கறிக்கு முருங்கையும்
கனிக்கு மாபலா வாழையும்
கஞ்சிக்கு வயலும்
பாலுக்கு பசுவும்


கொள்ளிக்கு பிள்ளையும்
பந்தம் பிடித்திட பேரரும்
ஊருக்கு உறவும்
உறவுக்கு கோவிலும்...என்று
வாழ்ந்த சொந்தங்கள் இங்கே
அன்னியதோர் மண்ணில்.....
அகதி அட்டையும்
அன்னிய பாஸ்போட்டும்
வாடகை வீடும்
வங்கிக் கடன் காரும்
சொந்தமென மகிழ்ந்திருந்தால்....மகிழ்ந்திருந்தால்
சிந்தாதா கண்ணீர்....அந்தச் சொந்தங்கள்.

படிப்பகம்

www.padippakam.com



## இயேசு பிதாவே!
## நீயே சொல்லு!!



வீட்டில் வளர்ந்திடும்
நாயும் பூனையும்
குட்டிகள் போட்டால்
வளர்ந்திடக் காலம்
வருவார் ஊரவர்
கொண்டு சென்றிட.

எஞ்சி இருப்பதை
ஏற்றிட ஆளில்லையேல்
கொஞ்சமும் அஞ்சிடா
என் பாட்டன் – நடுநிசிதன்னில்
தூரத்துப் பட்டண
சோற்றுக்கடைப் பக்கம்
கொண்டுசென்று விடுவாராம்
இது என் கிராமியதேசத்தில்
அன்று என் பாட்டி சொன்னது.
ஆனால்.......
சத்திய வீரராய் சமதர்ம வாதியாய்
உலகத்தை வாழ்விக்கும்
உத்தமர் தாமென
உலகசபைகளில் உரத்துப் பேசும்
மேற்குலக மேதைகளோ.....

www.padippakam.com



உயிருக்கஞ்சி ஓடிவந்தவனை
அடைக்கலமென கெஞ்சி நின்றவனை
விமானத்திலேற்றி எதிரிவீட்டுள்
தள்ளுதே இன்று

அன்னை சூசைமரியாளும்
தந்தை யோசேப்பும்
உன்னை நெஞ்சில் அணைத்தபடி
அண்டைநாடான எகிப்தில்
அடைக்கலமிருந்தபோது
எகிப்தான் உங்களை
எதிரியின் வீட்டுக்குள்
கப்பலேற்றி பிடித்தனுப்பியிருந்தால்.....?

இயேசுதேவனே!
உன்னைத்தான் கேட்கிறேன்
எங்கே நீ இருந்திருப்பாய் இன்று?
எங்கே நீ இருந்திருப்பாய் இன்று?



படிப்பகம்

www.padippakam.com



## ஒரு கேள்வி

அகதி அகதியென்று
அனுதினமும்
அவதியுறும் அகிலமே!
அகதியென்றோர்
புதிய இனம்
அகிலமெல்லாம் பரவிட
யார் காரணம்?
எண்ணியதைப் பார்த்ததுண்டா?

விரும்பியா இந்த இனம்
வீதிக்கு வந்தது?
இப்பெயரை விரும்பியா
இவரேற்றுக்கொண்டார்?
உயிருக்குப் பயந்தே
இவரோடி வந்தார்.
இவரது அவலம் எதுவென்று
எவரறிந்து கொண்டீர்?

நேட்டோ என்கிறீர்
வார்சோ என்கிறீர்
யூவென்னோ என்கிறீர்
ஐரோயூ என்கிறீர்
காப்பிதனைக் குடித்தபடி

www.padippakam.com



காலமெல்லாம் பேசுகின்றீர்.
பலகோடி செலவுசெய்து....
எடுத்தீரா ஒருமுடிவை?

கண்டுதான் பிடித்தீரா
காரணத்தை?
ஆசியாத் தெரு நாயாயாய்
அகிலமெல்லாம்
அலைந்திடும் இம்மக்கள்
குறைபோக்க துயர்தீர்க்க
இதுதான் கேள்வி இன்று
எவர் கண்டுபிடிப்பார் என்று?

∴∴∴

## முன்னேற்றம்

அகிலமெல்லாம்...இன்று
அதிவேக முன்னேற்றம்!
மக்களை அகதி ஆக்குவதில்!

∴∴∴

www.padippakam.com



**எதுகறை?**

எரிகிறதோ எம்தேசம்!
அழிகிறதோ எம்தேச எல்லை,இனம்.
தேய்கிறதோ எம் நேசமொழி.
மண்ணுக்காய்......?
படிகிறது கறைகளங்கே – எம்
பாலகரின் குருதியினால்.
விடிகிறது பொழுதுமங்கே
எம்முறவு விழித்தபடி காத்திருக்க.
................இத்தனையும்
இத்தனையும் – எம்மயலான்
அதிகார ஆட்சியிலே!
ஆனால்
அன்னிய நாட்டு
அடிமைவாழ்க்கை
சுதந்திரக் காற்றில்
சுகம் காணும் எம்மினத்தார் சிலர்
தாம் பெற்ற பிள்ளைக்குப் பெயர்
தங்கத் தமிழில் இல்லையாம்!
தரங்குன்றிப் போமாம் பிள்ளைவளம்!

இரக்கமற்ற அயலான்
செயல் கறையா?
இதையுணரா இத்தமிழர்
செயல் கறையா?

www.padippakam.com



## குண்டுகள்

எந்தநேரம்
எந்தவிதத்தில்
குண்டுவந்து
எங்கள் உயிர்களை எடுக்குமோ?
என்கின்ற ஏக்கம்
சொந்த மண்ணில்
தினமும் எங்கள் உறவுகட்கு!

அதுபோல்...
எந்தநேரத்தில்
எங்கள் உடலிலே
எப்பரிசோதனைக்கும் எட்டாத
எந்தநோய் வந்து
எடுக்குமோ எம்முயிரை
என்கின்ற ஏக்கம் எங்களுக்கு
இந்த அகதி மண்ணிலே....
புலமும் வரவும் வேறாகலாம்.
நிகழ்வில் இரண்டும் குண்டுதான்.

...

படிப்பகம்

www.padippakam.com



## இலட்ச ஏழைகள்

தாய்மண்ணை மறந்திட்ட மனமும்
பெற்ற தாய் தந்தையை மறந்திட்ட மகனும்

நெற்றிப்பொட்டை மறந்திட்ட சுமங்கலியும்
பெண்ணின் பண்பாட்டை மறந்திட்ட மங்கையும்

பிள்ளைக்கு தமிழ் புகட்ட மறந்திட்ட பெற்றோரும்
பிள்ளைக்கு தமிழ்பெயர்வைக்க மறுத்திடும் தமிழரும்

காலத்தே உழ மறந்திட்ட உழவனும்
ஏழைக்கு காலத்தே உதவமறுத்திடும் பணக்காரனும்

காலத்தை உணர்ந்து கவிபாட மறந்திட்ட கவிஞனும்
திறமையை,தியாகத்தை போற்றாத மனிதனும்

போரில் உடைவாளை மறந்திட்ட வீரனும்
நாட்டை சீராய்க் காக்க மறந்திட்ட அரசனும்

இலட்சங்கள் ஆயிரம் ஆயிரம் சேர்த்தென்ன......
பட்டங்கள் ஆயிரம் ஆயிரம் பெற்றென்ன....
இலட்சியத்தில் இவர் ஏழையே...........ஏழையே......
இவர் ஏழையே....ஏழையே.....

∴∴∴

www.padippakam.com



**ஏற்பாரா....?**

அழகான முள்முருங்கைப் பூவும்
ஆவரசம் பூவரசம் பூவும்
முல்லை மல்லி ரோஜாவோடு
முட்டிமோதிக் கொண்டனவாம்
பூக்கடை வாசலொன்றில்–தாமும்
பூமாலைதனிற்சேர...!
ஏற்பானா கடைக்காரன்?
சேர்ப்பானா மாலைதனில்?

தலையிலிருக்கும் தன்முடிக்கு
தண்ணீர் எண்ணை தடவி
பலபணத்தை தான் கொடுத்து
பக்குவமாய் தான்வளர்ப்போர்
தலையுதிர்ந்த தன்முடியைத்தானும்
தனதென்று சொந்தமென்று ஏற்பாரோ?
மனித இனத்தாலே ஒன்றானாலும்
நோக்கும் பாதைகள் வேறானால்.

வீட்டுப்பசு என்றாலும்–தன்
விளைந்த பயிர்தனைமேய்ந்தால்
ஏற்பானா கமக்காரன்?–உடன்
எழுந்து சென்று கலைக்கானா?

படிப்பகம்

www.padippakam.com



காகத்தின் கூடதனில் குயில்
களவாக முட்டைதனை இட்டதனால்
குயில்குஞ்சு காகமதாய் மாறிடுமா? –காகம்
தன் பறவையினம் என்று காத்துவளர்த்திடுமா?

தன்குட்டி ஆனாலும் பிடியைத்
தான் தவறவிட்டுவிட்டால் – சேரா
மந்தியினம் வந்துதித்த மானிடரே!
சிந்தியுங்கள் செயற்படுங்கள்!

***

## தெய்வம்


அம்மாவே தெய்வம்!ஆகாயம் பூமி!
அளக்கின்ற ஏணி அவள் நெஞ்சத்து அன்பு!

அவளழுதாலோ கண்ணீர்!ஆறாய்ப்பெருகி
தீயாக எனைச்சுடும் – பெரும் தீயாக எனைச்சுடும்.
அவளின்றி நானில்லை.நிலமின்றி பயிரில்லை.
பயிரின்றி கதிரில்லை.
தாயோடு சேயும்,சேயோடு தாயும்,
இனத்தோடு உறவும் உறவோடு மனமும்,
சேர்ந்தாலே வாழ்வாகலாம்!வாழ்வெல்லாம் வளமாகலாம்.
சகல .....வளமெல்லாம் தானாகலாம்...............

***

www.padippakam.com





**நீதி எங்கே ?**
**தர்மம் எங்கே ?**

உலகமெலாம் குண்டொலி
உயிர்களெலாம் அதற்குப்பலி.
மழைக்கால விட்டிலைப்போல
மக்கள் நெஞ்சத்து வாழ்க்கைநிலை.

பசிப்பிணியால் சாவோர் கோடி!
நோய்ப்பிணியால் சாவோர் அதனிலும் கோடி.
உடையில்லா மக்கள் மூலையிலே
உயிரில்லா உடல்கள் பல வீதியிலே.

திட்கெட்டும் தினச்செய்தி
திகைப்பூட்டும் இச் செய்திகளே!
உலகப்பெருநாடுகளும்
உருக்கமுடன் இவைபற்றிக் கூட்டங்கள்.

படிப்பகம்

www.padippakam.com





சங்க[illegible]போன்ற
சரக்[illegible]றியே இவர்கள் பேச்சு.
அகதிக்கு உடை,மருந்து உணவு
அவர்தம் இருக்க வசதி.

வல்லரசுக் கூட்டத்தில்
வலுவான தீர்மானங்களிவை
இறந்தமனிதர்களுக்கு அனுதாபம்—தப்பி
இருக்கும் மக்களுக்கு அகதி நாமம்.

வந்த நோயறிந்து மருந்துசெய்ய
வரவில்லை மனம் இச்சபைக்கு.—மக்கள்
அகதியான நிலையறிந்து...
அதைத் தீர்க்கும் நோக்கமில்லை.

ஏனென்றால் இவர்களின்
அணு உற்பத்திப் பெருக்கத்தின்
அழகுப் பொருட்களாம்,உயிர்
அழிவுப்பொருட்களை ஏற்றி
அகிலத்தை சுற்றி சந்தைபோடும்
சித்திரத்தேரின் நுகத்தடிக் குதிரையாய்
சிக்கித் தேர் இழுப்போரோ.........
நீதிதேவதையும்,தர்மத் தாயுமா?
நீதிதேவதையும்,தர்மத் தாயுமா?

∴∴

## வாழ்த்து

நாமும்
வாழைக்குலையோடு
மாபலாத் தோரணமும்
முற்றிய கரும்போடு
முற்றத்தில் கோலமும் போட்டு
மூன்றடுப்பை முற்றத்தில் மூட்டி
பச்சை நெல்லரிசியை
பானைதனிலிட்டு
சுற்றிய உறவோடு
தாய்மண்ணில் சுதந்திரமாய்
பொங்கிட வழியொன்று
சொல்லாதா நமக்கென்று
வந்திடும் இப்பொங்கலை
வரவேற்று வாழ்த்திடுவோம்;
நெஞ்சில்
கனத்திடும் சுமைக்கது
காணாதோ வழியென்று!



14.01.1997

www.padippakam.com



# பின்னுரை

சுமார் நான்கு ஆண்டுகால இடைவெளிக்குப்பின்னர் பொன்னண்ணாவின் இரண்டாவது கவிதைத்தொகுதியான "வெந்தவனம்" வெளிவந்திருக்கிறது. அவ்வப்போது அவர் உள்ளத்தில் மூண்ட உணர்வுகளால் உருவாக்கப்பட்ட கவிதைகள் ஓர்தொகுப்பாக கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு கவிதைத்தொகுதி தரமானதுதானா? தரங்கள் என்று கூறப்படும் உச்சங்களின் இறுதிப்புள்ளியை அது எட்டிவிட்டதா? அல்லது அது தன் இலக்கை அடையவில்லையா? என்பனபோன்ற கேள்விகளுக்கான விடையை ஒரு கவிதைத்தொகுதியானது வெளியீட்டின் பின்னரே சந்தித்துக்கொள்கின்றது.ஏனெனில் அதைத்தீர்மானிப்பவர்கள் வாசகர்களே.

தமிழ்கவிதைகளால் நடந்துவந்தமொழி "நெற்றிக்கண் ணைத்திறந்து காட்டினாலும் குற்றம் குற்றமே" என்பது தமிழ் கவிதைத்திறனாய்வின் ஓர் ஆரம்பக்குரலே. இத்தகைய கடுமை யான மதிப்பீடுகளால் பாதைவெட்டிக்கொண்டு நீண்டதூரம் ஓடிவந்திருக்கிறது தமிழ்க்கவிதை நதி. எனவேதான் கவிதைகளும் வடிவம், உள்ளடக்கம் போன்றவற்றில் மாறிக் கொண்டேசெல்ல, திறனாய்வுக்கலையும் அதற்கேற்ப தன்னையும் மாற்றிச்சென்றது. இதுவே தமிழ்கவிதைகளின் நெடியவரலா றாகும். இத்தகைய பலமான பின்னணியில்வைத்து இன்றைய புலம்பெயர் கவிதைகளை மதிப்பீடுசெய்வது பொருத்தமான காரியமாகப்படவில்லை. ஏனெனில் புலம்பெயர் வாழ்வின் பின்புலம், வாழ்க்கைமுறைமை, கவிதைக்கருயாவும் தமிழின் நீண்ட கவிதைப்பாரம்பரியத்திலிருந்து ஏறத்தாழ விடுபட்டுப்போயுள்ளன.

www.padippakam.com



தமிழ்மக்களின் சுமார் 15 ஆண்டுகால புலம்பெயர்வாழ்வுக்கும், அதிலிருந்து வெளிவரும் படைப்புக்களுக்கும் சிலபுதிய அணுகு முறைகள் அவசியமாகத்தேவைப்படுகின்றன.

புலம்பெயர்மக்களிடையே வெளிவரும் தமிழிலான இலக்கியமுயற்சிகளுக்கு பலசாதகமற்றதன்மைகள் தொடர்ந்தும் அதிகரித்தேசெல்கின்றன.அன்றாடவாழ்வில் மக்கள் தமிழ்மொழியை பாவனைப்படுத்தும்நேரம் வருடாவருடம் குறைவடைந்து செல்கின்றது. ஒவ்வொருமணித்துளிகளும் வேலைகளால் விலைகூறி விற்பனையாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் புலம்பெயர்வாழ்வில், வேறுகாரியங்களுக்காக பயன்படுத்த எங்காவது நேரத்தை தேடமுடியுமானால் முதலில் பலியாகிப்போவது வாசிப்பதற்காக ஒதுக்கப்படும்நேரமே. இந்தநிலையில் வாசிப்பின்பால் மக்களை ஈர்க்கவும்,தரமான படைப்புக்களை அடையாளம்காட்டவும் உரியஏற்பாடுகள் புலம்பெயர்சூழலில் ஆரம்பமாகவில்லை. இரகமணி டி.கே.சி சுவைத்தல்கலைபற்றி எழுதியதுபோலவோ, அல்லது புதுக்விதைகளை வாசகருக்கு அடையாளம்காட்ட உழைத்த சி.சு.செல்லப்பாவின் எழுத்து சஞ்சிகைபோலவோ சிலபணிகளை ஆரம்பித்து, புலம்பெயர் வாசகர்களையும் வளர்த்தெடுக்கவேண்டியுள்ளபணியானது வெற்றிடமாகவே இருக்கிறது. மக்களிடையே சுவைத்தற்கலை எவ்வளவுதூரம் வளர்ச்சிபெறுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவே கவிதைக்கலையும் மேன்மைபெறும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மேலும் பெரும்பாலான புலம்பெயர்வெளியீடுகளை பொறுத்தவரை படைப்பாளியே முதலீட்டாளன், வடிவமைப்பாளன், ஒவ்வொரு வீடுவீடாகப்படியேறி விற்பனைசெய்யும் விற்பனையாளன் என குறைந்தது நான்கு முக்கியபணிகளையாவது அவர்களே செய்யவேண்டியநிலையில்

www.padippakam.com



இருக்கிறார்கள்.அதேவேளை அவர்களது எழுத்துக்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரமும் இலவசசேவைகளுக்குள்ளேயே அடங்குகிறது. இந்தளவிற்குபின்னும் அவர்கள் விட்ட முதலையாவது தமது விற்பனையால் எட்டிப்பிடிக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. இத்தகைய சாதகமற்ற சூழ்நிலையில்தான் புலம்பெயர்படைப்புக்கள் வெளிவருகின்றன. எனவேதான் நமது பழையதும்கூரியபற்களைக் கொண்டதுமான விமர்சன அளவுகோல்களை குழந்தைநிலையிலுள்ள புலம்பெயர் படைப்புகளின்மீது சரேலெனப் பாய்ச்சுவது பொருத்தமானதாகத் தெரியவில்லையென்று முன்னரே குறிப்பிட்டேன்.

மேற்கண்ட சாதகமற்ற பின்னணிகள் அனைத்தையும் தனது முதலாவது கவிதைத்தொகுதியை வெளியிட்டபோதே எதிர்கொண்ட அனுபவத்தின்பின்னரும்கூட, அத்தகைய பாதகமான புறச்சூழலைக் கவனத்தில் கொள்ளாது இரண்டாவது கவிதைத்தொகுதிக்காக அவரைத் தயாராக்கியிருப்பதும், இக்கவிதைத்தொகுதியின் வெளியீட்டு முயற்சிக்காக முன்தள்ளி விட்டிருப்பதுமான விசை எது? என்றால் அதற்கு விடை அவரது கவிதைகளே என்பதாகும். இதுவே பொன்னண்ணாவின் கவிதைகளுக்குரிய முக்கியத்துவமாகும். உள்ளத்தில் உள்ளதைச் சொல்லவேண்டுமென அகத்தில் உண்டான உதைப்பே அவரின் கவிதைகளின் தலைமைவெளிப்பாடு. இவை புறக்காரணிகள்பற்றிய கவலையற்றநிலையில் அதிகமாக அலட்டிக்கொள்ளாமலே வெளிவந்தும் நிற்கின்றன. இதுவே இக்கவிதைகளுக்குள்ள பலம். இத்தகையநிலையோடு உடன்பாடு காணாதபட்சத்தில் அதுவே இக்கவிதைகளின் பலவீனமுமாகும். எந்தவொரு கவிதைத்தொகுதியிலும் எல்லாக்கவிதைகளுமே உயர்வானவையென வாதிடமுடியாது. எனினும் எல்லாத் தொகுப்புகளிலுமேஉயர்வானவை எடுத்துச்சொல்லப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



பொன்னண்ணாவிடம் கவிதை இருக்கின்றது. அது பலஇடங்களில் தன்னை வெளிக்காட்டி நிற்கிறது. "வெந்தவனம்" என்ற பெயருக்கேற்ப புலம்பெயர்ந்த வாழ்வில் நின்று தனது தாயகத்தின் அவலங்களையும், இனத்தின் பேராலும், மதத்தின்பேராலும், மொழியின்பேராலும், மேலாண்மை கொள்ள முற்பட்டோருக்கு எதிராக போர்க்குரல் கொடுக்கின்றன அவரதுவரிகள். அத்தோடு இளமைக்கால நினைவுகளும், இழந்துபோன தாயகத்து வாழ்வுக்கான பெருமூச்சுகளும் எல்லா இடங்களிலுமே ஓங்கித்தொனிக்கக் காண்கிறோம்.

வானம் குடைபிடிக்க
வெண்ணிலவு ஒளிகொடுக்க

..............

இன்றோ வானம்தனைமறைத்து
வல்லூறு குடைபிடிக்க வானத்தை கிழித்து
ஹெலிவந்து குண்டடிக்க

எனவரும் வரிகளோடு,

ஊரெல்லாம் நந்தவனம் – என்
உள்ளமெல்லாம் வெந்தவனம்.

என்றவரிகளையும் இணைத்துவிட்டாலே போதும் அவரின் உள்ளத்துள்ளதை தெட்டென அடையாளம் கண்டுவிட முடியும்.

உள்ளத்துள்ளதுகவிதை,இனிய உருவெடுப்பது கவிதை, தெள்ளத்தெளிந்த தமிழில் உண்மை தெரிந்துரைப்பது கவிதை என்று கவிதைக்கலையை வரைவிலக்கணப்படுத் துவார் கவிமணி. தேடல், அனுபவம், வாசிப்பு,கடினமுயற்சி, உயர்வைமட்டும் நோக்காகக் கொண்ட பழுதற்ற விமர்சனம் இவைகளை புலம்பெயர்சூழலில் சிறப்பாக வளர்த்தெடுக்வேண் டிய அவசியம் இப்போது நம்முன் கட்டாயத்துக்குரிய பணியாக

www.padippakam.com



விரிந்து பரந்து கிடக்கிறது. நாம் புலம்பெயர்ந்து நின்றாலும் தமிழ் கவிதை வளர்ச்சியோடு சேர்ந்து வளர்வதற்கு ஏற்ற சந்தர்ப்பசூழ்நிலைகள் இங்கு சிறப்பாக அமையாவிடினும், உலகத்தரத்திற்கு உயர்ந்துள்ள கவிதைச்சுரங்கமாயுள்ள டெனிஸ் கவிதைகளும், அவற்றை உருவாக்கிய எண்ணற்ற கவிஞர்களும் நம்மிடையேதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அத்தகைய வளங்களை பயன்படுத்தி, இடைவெளிகளை நிரப்பிக்கொள்ளவேண்டியதும், கவிதைகளை புதிதுபுதிதாக எழுதவேண்டியதும், நம்முன்னுள்ள அடுத்தகட்டப் பணிகளாகும். புலம்பெயர் கவிதைக்கலையை மேம்படுத்த பல ஆக்கபூர்வமான படிகளை நாம் களைப்பின்றி அமைத்துச் செல்லவேண்டியிருக்கிறது. அந்தப்பயணத்தில் "வெந்தவனம்" ஒருபடிக்கட்டாக அமையவேண்டும்.அமையும். என புலம்பெயர் தமிழீழமக்களோடு ஒருவனாக நின்று வாழ்த்துகிறேன்.

கே.எஸ்.துரை
டென்மார்க்
*22.02.1997*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



நந்தவனம் பூப்பூக்கும் — என்
வெந்தமனம்......?

—பொன்னண்ணா

படிப்பகம்